214

214

திருநெல்வேலி வேத சாஸ்திர நூல்கள்

IV. 4

பரிசுத்த நற்கருணை ஆராதனை

OFFICE OF THE ... MADRAS
1 - NOV 1941

341

திருநெல்வேலி அத்தியக்ஷாதீன நூற்பதிப்புக் கழக வெளியீடு

திருநெல்வேலி வேத சாஸ்திர நூல்கள்

IV. 4

பரிசுத்த நற்கருணை ஆராதனை

265.3

OFFICE OF THE REGISTRAR OF ...
1 - NOV 1941
MADRAS

341

திருநெல்வேலி அத்தியக்ஷாதீன நூற்பதிப்புக்
கழக வெளியீடு

பாளையங்கோட்டை, பாளையங்கோட்டை பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது
1941

விலை அணு 4

பொருளடக்கம்

	நூன்முகம்	1
I.	சரித்திரம்	1
II.	ஆராதனையின் பெயர்	4
III.	ஓர் உவமானம்	6
IV.	ஆராதனை முறைமை — ஆயத்தம்	8
V.	,, ,, பரி. நற்கருணை	25
VI.	,, ,, ஸ்தோத்திர பாகம்	35
VII.	கடைசி ஜெபங்களும் சட்டங்களும்	39
VIII.	புத்திமதிகள்	46
IX.	ஆராதனையும் தேவ ஊழியரும்	49

நூன்முகம்

சில வருடங்களுக்கு முன் வாலிப உபாத்திமாருக்கென்று நடத்திய ஓர் கூட்டத்தில், பரிசுத்த நற்கருணையிலுள்ள பகுதிகளையும் ஜெபங்களையும் வரிசையாய்ச் சொல்லும்படி அங்கு வந்த தேவ ஊழியரை கேட்டுக்கொண்டோம். அவற்றைச் சரியாய்ச் சொல்ல ஒருவராலும் முடியவில்லை. தற்காலத்து ஊழியர் அறிவில் தேர்ச்சி யடைந் திருக்கிறார்களா வென்று அறியோம். அந்த ஆராதனையின் போக்கும் விசேஷமும் மேன்மையும் இன்னவென்று மேய்ப்பர்கள் அறியாதிருக்க, சபையார் அவற்றை அறிந்து கொள்வது அரிது.

நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் என்பது பரிசுத்த பவுலின் ஐதிகம். நம் சபை ஒப்புக்கொண்ட பிரமாணம் இதுவே. செய்யப்படுவது இன்னதென்று ஜனங்கள் அறிந்து கொள்வதுமல்லாமல், சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்டு, கிரகித்து, தங்கள் சொந்த ஜெபமாகப் பரம பிதாவுக்குச் சமர்ப்பிக்கும்படி, ஆராதனைகளெல்லாம் ஜனங்களுக்கு விளங்கும் பாஷையில் நடத்தப்பட வேண்டுமென்பது ஆங்கில திருச்சபைக் கட்டளை. இதற்கு இசைய, நம் பரிசுத்த நற்கருணை ஆராதனை தமிழில் நடத்தப்படும். ஆயினும் அது உயரிய போதனைகளும் விசேஷ கருத்துக்களும் மேன்மையான நடைகளும் அடங்கியிருப்பதால், சாமானிய மக்கள் முழு உணர்வோடு அதில் பங்கு பெறுவது இலேசான காரியமல்ல. தேவனுடைய தயவினால், பரிசுத்த நற்கருணைக்காரர் தொகை பெருகிக்கொண்டே வருகிறது. நமக்கு இருக்கும் குருமாரின் சரீரப் பலத்துக்குத் தக்கபடி, கூடியவாறு எல்லா இடங்களிலும் பரிசுத்த நற்கருணை ஒழுங்காய் ஆசரிக்கப் பட்டு வருகிறது. தேவனுடைய பிள்ளைகள் பய பக்தியோடே

திருப் பந்தியில் சேரும்படி வருவார்கள். இந்தப் பய பக்தி இருப்பது அவசியம்; உணர்வும் அவசியம். இப்படிப்பட்ட காலத்தில் இச்சிறு புஸ்தகம் பிரசுரமாவது மிகவும் உபயோக மாயிருக்கு மென்று நம்புகிறோம்.

எங்கள் ஊர் உபாத்தியாயர் பரீட்சையில் நல்ல மார்க்கு பெற்றார். ஆனால் அவருடைய ஊழியத்தில் என்ன வித்தியாசம் காணப்படுகிறது? என்று சபையார் ஆக்ஷேபிப்பதை வேளா வேளைகளில் நாம் கேட்பதுண்டு. 1942-ம் ஆண்டில் பரீட்சை எழுதப்போகிற சகோதரர் இச்சிறு நூலை ஏற்றவாறு வாசிப்பார்களாயின், அவர்களைக் குறித்து அந்த ஆக்ஷேபணை கூறப்படாதிருக்குமென்று எண்ணுகிறேன். கடைசி இரண்டு மூன்று பக்கங்களில், உபாத்திமாருக்கு உபயோகமான சில குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. உற்று நோக்கின், ஒவ்வொரு இதழிலும், உபாத்திமாருக்குப் பிரயோஜனமான ஆலோசனைகளும் புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன. இதைப் படிப்பவர்கள் பரீட்சைக்கென்று படிப்பதுமன்றி, தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பணிவிடைக்கும் உபயோகமாக இதை ஆராய்ந்து உட்கொள்வார்களாயின், அவர்கள் நடத்தும் ஆராதனைகளில் முன் காணப்படாத சிறப்பும் பக்தி விநயமும் ஒழுங்கும் காணப்படு மென்று உறுதியாய் நம்புகிறோம்.

ஆண்டவர் இந்த நூலையும் இதை வாசிப்பவர்களையும் ஆசீர்வதிப்பாராக.

ஸ்தேவான் திருநெல்வேலி

பரி. நற்கருணை ஆராதனை

I சரித்திரம்

கிறிஸ்து சபைக்கும் யூத சபைக்குமுள்ள சம்பந்தத்தையும், தொடர்பையும் நாம் நன்கு அறிவோம். கிறிஸ்து சபையின் ஆராதனை யூத சபையின் ஆராதனையை ஒருவாறு அனுசரித்துள்ளது. யூத சபை ஆராதனைகளில் பலி முக்கியமும் விசேஷமுமானது. பலியும் பலவிதப் போங்குள்ளது. இவைகளையெல்லாம் ஆதித் திருச்சபை பரிசுத்த நற் கருணை ஆராதனையில் அமைத்துக் கொண்டாடி வந்திருக்கிறது. பரிசுத்த நற்கருணை ஆராதனை (1) ஞாபகார்த்தமாயும் 'என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்', (2) கிறிஸ்து செலுத்திய பாவநிவாரண பலியாயும் 'பாவமன்னிப்புண்டாகும்படி சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தம்,' (3) கிருபாதார பலியாகவும் 'நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே,'. (4) சமா தான பலியாகவும் 'நாம் அவருக்குள்ளும் அவர் கமக்குள்ளும் வாசம் பண்ணுவதற்கு ஏதுவாய்,' ஆசரிக்கப்பட்டு வந்தது. ஆகவே பரிசுத்த நற்கருணை ஆதித் திருச்சபையின் ஒரே முக்கிய ஆராதனையாகும்.

'அவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்திலும், அந்நியோன்னியத் திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் தரித்திருந்தார்கள்' (அப். 2: 42). இது இக்காலத்திலுள்ள ஆராதனையையும், ஆராதனையின் பல பாகங்களையும் முன் குறிப்பிடுகிறதாகும். (1) அப்போஸ்தலர் உப தேசம்:— நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம், பிரசங்கம் முதலீயன; (2) அந்நியோன்னியம் :— காணிக்கை. (3) அப்பம் பிட்குதல்:— பரி சுத்த நற்கருணைப் பிரதிஷ்டை, பங்கு பெறுதல். (4) ஜெபங்கள் :— ஜெபங்களும், மன்றாட்டுகளும். இவைகளை அனுசரித்துப் பல இடங் களிலும் சற்று வித்தியாசமான ஆராதனை முறைமைகள் வழங்கப்பட்டன.

பூர்வ ஆராதனை முறைமைகளை ஐந்து விசேஷமானவைகளாகத் தொகுக்கலாம்:—

1. பரிசுத்த யாக்கோபின் பெயரால் எருசலேமில் வழங்கிய முறைமை.
2. பரிசுத்த மாற்குவின் பெயரால் அலெக்சந்திரியாவில் வழங்கி வந்த முறைமை.
3. பரிசுத்த ததேயுவின் பெயரால் அசீரிய, கல்தேய சபை களில் வழங்கி வந்த முறைமை.
4. பரி. யோவானின் பெயரால் எபேசுவில் வழங்கி வந்த முறைமை. இது ஸ்பெயின், பிரான்சு தேசத்தோடு சம்பந் தப்பட்டுள்ளது.

5. பரி. பேதுருவின் பெயரால் ரோமாபுரியில் வழங்கி வந்த முறைமை. இது ஒன்றுதான் மேற்பாகத்துச் சபைக்குரியது.

குறிப்பு. 1. கிழக்கத்திச் சபைகளின் ஆராதனை முறைமைகளில் பரிசுத்த ஆவியானவர் தாமே அப்பத்தின்மேலும் திராட்ச ரசத்தின் மேலும் இறங்கி அவற்றை ஆசீர்வதிக்கும்படியான விண்ணப்பமுண்டு.

2. பரி. பேதுரு, பரி. யோவான் பெயரால் வழங்கிய ஆராதனை முறைமைகளில் சுருக்க ஜெபம், நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம் மாறி மாறி வந்தன.

3. பரி. யாக்கோபு, பரி மாற்கு, பரி. மத்தேயு இவர்கள் பெயரால் வழங்கிய ஆராதனை முறைமைகளில் வருஷ முழுவதும் உபயோகிக்க வேண்டிய ஒரே முகவுரை யுண்டு.

பரி. யோவான் பெயரால் வழங்கிய ஜெப முறை சின்ன ஆசியா (எபேசு) விலிருந்து பிரான்ஸ் தேசத்திற்கு வந்த மிஷனெரிகளால் பிரான்ஸ் தேசத்தில் முக்கியமாய் லியான்ஸ் பட்டணத்துச் சபையில் உபயோகிக்கப்பட்டு, அங்கிருந்து இங்கிலாந்து தேசத்து சபைகளிலும் வழங்கி வந்தது.

596-ம் வருஷம் பரி. அகுஸ்டீன் இங்கிலாந்துக்கு வந்து, அங்கு உபயோகிக்கப்பட்டு வந்த ஜெப முறையில் சில மாறுதல்களைச் செய்தார். அவர் செய்த மாறுதல்கள் ரோம சபையின் ஜெப முறையிலிருந்து அல்ல, பிரான்சு தேசத்தின் தென்பாகமாகிய கால் நாட்டில் உபயோகித்து வந்த கால் தேசத்து ஜெப முறையிலிருந்தே. பின்னுல் 1085-ம் வருஷம் சாலிஸ்புரி (சேரம்) அத்தியட்சரான ஆஸ்மண்ட் அக்காலத்து ஜெப முறையை சற்றுப் புதுப்பித்து அமைத்தார். அவர் எழுதிய ஜெப முறையே சீர்திருத்த காலம் வரைக்கும் உபயோகிக்கப்பட்டு வந்தது.

1548-ம் வருஷம் 8-வது ஹென்ரி அரசனுடைய விருப்பப்படி சிரேஷ்ட அத்தியட்சராகிய கிரான்மர் ஒரு ஜெப முறையை எழுதி வெளியிட்டார். அது ஜெப முறையாக அல்ல, பரிசுத்த நற்கருணை சேர விரும்பும் ஜனங்களுக்கு உதவியாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் பாவ அறிக்கைக்கு முன்னுள்ள புத்திமதி, பாவ அறிக்கை, பாவ விமோசனம், ஆறுதலான வார்த்தைகள், பந்தி சேரும் விண்ணப்பம், பரி. நற்கருணை பரிமாறும் போது சொல்லப்படும் வார்த்தை, ஆசீர்வாதம் அடங்கியுள்ளது.

குருமார் தினந்தோறும் பரி. நற்கருணையை ஆசரித்து வந்தாலும், சபையாரில் பெரும்பாலர் வருஷத்திற்கு ஒரு தரம் கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகையில் பரி. நற்கருணைப் பந்தியில் பங்கு பெற்றார்கள். பரி. நற்கருணை ஆராதனை சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்ளக்கூடாத படி லத்தீன் மொழியில் வழங்கப்பட்டது. பிரதிஷ்டை செய்யப்பட்ட ரசம் சபையாருக்குக் கொடுக்கப்படவில்லை. இவ்வித ஒழுங்கீனங்களைத் தவிர்த்து, 1549ம் வருஷம் ஆருவது எட்வர்ட் அரசனின் காலத்தில் ஓர்

புதிய ஜெப முறைமை வெளியிடப்பட்டது. இதுவே 6வது எட்வர்டு அரசரின் முதலாவது ஜெப புஸ்தகமாகும். இது சீர்திருத்தக்காரரின் முதலாம் ஆராதனை முறைமை. சில சீர்கேடுகளைத் தகர்த்து, சடங்காசாரங்களைக் கூடிய வரை குறைக்க முயன்று வந்தனர். 'பக்திக்கடுத்ததாகவும், தேவ வசனத்திற்கும், ஆதித் திருச்சபையின் வழக்கத்திற்கும் உகந்ததாயும் இருந்தது' என்பது இந்த முறைமையைப்பற்றியுள்ள சாட்சியம். ஆராதனையின் இரண்டாம் பாகம் பரி. நற்கருணைப் பந்தியில் சேருகிறவர்களுக்கு மட்டும்.

முதல் பாகம்.

1. கர்த்தருடைய ஜெபம், இருதய சுத்தத்திற்காக ஜெபம்.
2. 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை' என்னும் பாட்டு.
3. அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபமும், அதன்பின் இராஜாவுக்காக ஜெபமும்.
4. நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம்.
5. விசுவாசப் பிரமாணம்.
6. பிரசங்கம், புத்திமதி.
7. காணிக்கை.
   (பரிசுத்த நற்கருணைப்பந்தி சேராதவர்கள் போய்விட),

இரண்டாம் பாகம்.

8. அப்பம், திராட்சரசம் படைத்தல்.
9. 'உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்'
   ....முகவுரை, முத்துதிக் கீதம்.
10. சபையனைத்திற்காகவும் ஜெபம்.
11. பிரதிஷ்டை ஜெபமும், (பரிசுத்த ஆவியின் பிரசன்னத்திற்காக மன்றாட்டுடன்) சரீர ஆத்தும அர்ச்சனை ஜெபமும்.
12. கர்த்தருடைய ஜெபம், புத்திமதி.
13. அழைப்பு, பாவ அறிக்கை, பாவ விமோசனம், ஆறுதலான வார்த்தைகள்.
14. பந்தி சேரும் விண்ணப்பம்.
15. பரிமாறுதல் (உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி.........பாடப்படும்.)
16. கீதமும் ஸ்தோத்திரமும்.
17. ஆசீர்வாதம்.

1552-ம் வருஷம், சீர்திருத்தக்காரரில் சிலர் இந்த மாற்றங்கள் போதாதென்றும், இந்த ஜெப முறைமை ரோமாபுரி ஜெப முறைக்கு

அதிகமாய் ஒத்திருக்கிறதென்றும் முறையிட்டதால், 1549-ம் வருஷத்து ஜெப புஸ்தகத்தில் பல மாறுதல்கள் உண்டாயின. பரி. நற்கருணை ஆராதனையில் செய்யப்பட்ட மாறுதல்கள் மிதமிஞ்சினவைகள் அல்ல.

1. போராடும் சபைக்கான ஜெபம் காணிக்கைக்குப் பின்னும், அழைப்பு, பாவ அறிக்கை, விமோசனம், ஆறுதலான வார்த்தைகள் முதலியவை பிரதிஷ்டைக்கு முன்னும், சரீர ஆத்தும அர்ச்சனை ஜெபமும், 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை' என்னும் கீதமும் பரிசுத்த நற்கருணை பரிமாறுதலுக்குப் பின்னும் கொண்டுவரப்பட்டன.

2. போராடும் சபைக்கான ஜெபத்தில் இவ்வுலகத்திலுள்ளவர்களை மாத்திரம் ஜெபத்தில் நினைக்குமாறு இவ்வுலகத்தில் போராடும் என்ற பதங்கள் சேர்க்கப்பட்டன.

3. பிரதிஷ்டை ஜெபத்தில் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்திற்கான மன்றாட்டு விடப்பட்டது.

4. பரிமாறும் சமயத்தில் சொல்லப்படும் வசனத்தில் தற்சமயமுள்ள முதலாம் பாகம் விடப்பட்டு இரண்டாம் பாகம் வழங்கப்பட்டது.

1553-ம் வருஷத்தில் ரோம மார்க்கத்தமைந்த மேரி ராணி அரசாள இந்த 1552-ம் வருஷத்து ஜெப புஸ்தகம் சிறிது காலந்தான் உபயோகிக்கப்பட்டது. என்றாலும் எலிசபெத்தின் காலத்து 1559-ம் வருஷத்து ஜெப புஸ்தகம் அதை அனுசரித்தது. அச்சமயத்தில் நற்கருணை பரிமாறப்படும் சமயத்தில் சொல்லப்படும் வசனத்தின் இரண்டு பாகங்களும் சேர்க்கப்பட்டன.

1662-ம் வருஷத்தில் போராடும் சபைக்காகச் செய்யும் ஜெபத்தில் மரித்துப் போனவர்களைப்பற்றிய துதியும் கூட்டப்பட்டது. இதுவே தற்சமயமுள்ள ஆராதனை முறைமை.

1928-ம் வருஷத்துப் புது ஆங்கில ஜெபமுறைக்கு இசைய, பத்துக் கற்பனைக்குப் பதிலாக கிறிஸ்துவானவர் கூறின கற்பனையையும், சரீர ஆத்ம அர்ச்சனை ஜெபத்தைப் பிரதிஷ்டை ஜெபத்தோடும், இரண்டாம் கர்த்தருடைய ஜெபத்தை பரி. நற்கருணை பரிமாறுதலுக்கு முன்னும் வாசிக்கும்படி, இந்தியாவிலுள்ள அத்தியக்ஷர்மார் மகா சங்கத்தால் அநுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

II ஆராதனையின் பெயர்

பெயர் பொதுவாகப் பொருத்தமாயும் பொருள் உள்ளதாயும் இருத்தல் வேண்டும். நாமதேயம் பெற்ற வஸ்துவின் சரித்திரம், தன்மை, முறைமை, உபயோகம் முதலியவைகளைக் குறிக்கத்தக்கதாயிருத்தல் வேண்டும். ஆகவே பெயரிடுதல் கஷ்டமானதேயாகும். 'ஆதாம் பெயரிட்டான்' இலகுவானதல்ல, அவனுக்குக் கிடைத்த தேவ வெளிப்படுத்தலினிமித்தம் ஏற்ற நாமத்தையிட்டான்.

பரி. நற்கருணை ஆராதனைக்குப் பல நாமங்கள் வழங்கி வருவதை நாம அறிவோம்.

1. கர்த்தருடைய ராப்போஜனம். (I கொரி. 11: 20) 'நம் முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே" இதை நியமித்தார் என்னும் சரித்திரத்தைக் குறிக்கிறது. மேலும் இந்தச் சாக்கிரமெந்து ஓர் விருந்தென்னும் விசேஷ தன்மையையும் குறிக்கிறது. ஆரம்ப சரித்திரத்திற்கேற்ப சில காலம் ஆதித் திருச்சபையில் இராத்திரியில் ஆசரிக்கப்பட்டது. அது பல ஒழுங்கீனங்களுக்கும் அசட்டைக்கும் ஏதுவாயிருந்தது. ஆகவே அதி காலையில் ஆசரிக்கப்படும் வழக்கம் உண்டானது. காலை தேவ வழி பாட்டிற்கு ஏற்ற நேரமே யாகும். பக்திக் கனுகூலமாக உபவாசத்தோடு இதை ஆசரிக்கும் வழக்கமும் ஏற்பட்டது.

கர்த்தருடைய ராப்போஜனம் என்னும் பெயர் ஞானோபதேச வினு விடையிலும் வேத சித்தாந்தப் பிரமாணத்திலும் (28-வது) வழங்கப்படு கிறது. சீர்திருத்தக்காரர் இப்பேரைப் பாராட்டி வந்தார்கள். அக்காலத் தில் ரோம சபை வேடிக்கையாய்ப் பார்க்கிறதற்கும் எடுத்துக் கொண்டு திரிகிறதற்கும் சாக்கிரமெந்தை உபயோகித்ததையும், மேலும் குருவான வர் மாஸ் என தனிமையாய் நடத்திவந்த வழக்கத்தையும் நிராகரிக்குமாறு கர்த்தருடைய ராப்போஜனம் என்னும் பெயரை வற்புறுத்தினர்கள். முன்னல் வெகு தாராளமாய் உபயோகிக்கப்பட்டு வந்த 'மாஸ்' என் னும் பெயர் 1552-ம் வருஷத்து ஆராதனையில் முற்றிலும் நீக்கப்பட்டது.

2. பரிசுத்த நற்கருணை. இது தமிழில் வெகு சாதாரணமானது. நற்கருணை, 'நல்+கருணை' தேவகிருபை அல்லது ரோமானித்தர் சொல்லுகிறபடி தேவ நன்மையையே குறிக்கிறது. இது இவ்வாரா தனையின் பலனைப்பற்றியுள்ளது. பரிசுத்த நற்கருணை சபையின் சாக்கிரமெந்தானமட்டும் கிருபையின் யத்தனமே. இதனல் தேவ கிருபையை நாம் அடைவது நிச்சயம். 'நமக்கு அருளிச் செய்யப் படுகிற ஆவிக்குரிய உள்ளான கிருபைக்குக் காணப்படுகிற புறம்பான அடையாளமே சாக்கிரமெந்து. Communion என்னும் ஆங்கில பதத் திற்குப் பதிலாகப் பொதுவாய் உபயோகிக்கப்பட்டு வந்தாலும் ஏற்ற தல்ல. ஆங்கில பதம் ஐக்கியம், அந்நியோன்னியத்தைப் பாராட்டு கிறது. இது 'பரிசுத்த அந்நியோன்னியம்'. உத்தம விசுவாசிகளின் கூட்டமும் தமது நேசகுமாரனுடைய ஞான சரீரமுமாகிய சபையில் நாம் அவயவங்களாக இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பது நற்கருணையி னுலே நமக்கு நிச்சயப்படுத்தப்படுகிறது. மேலும் இந்த ஐக்கியம் கிறிஸ்துவோடும் கிறிஸ்துவின் ஞான சரீரமாகிய சபையோடும் உள்ளது, 'சபை ஒன்றே'. கிறிஸ்துவுக்குள் பரமசபை அனைத்தோடும், பிரதான தூதரோடும் நாம் சேர்ந்து இந்த ஆராதனையில் தேவனுடைய மகிமை யுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி ஸ்தோத்திரிக்கிறோம்

பக்தர்கள் இந்த ஆராதனையில் அனுபவிக்கும் இந்த மேலான உன்னத அந்நியோன்னியம் ஆச்சரியமானதே. அந்நியோன்னியம் என்பது வெறும் அனுதாபத்தைமட்டுமல்ல, ஒருவருக்காக ஒருவர் எடுக்கும் சிரத்தையையும் குறிக்கிறது.

3. துதிஸ்தோத்திர பலி. கிழக்கத்திச் சபைகளில் வழங்கி வந்த அதிபூர்வ பெயர். 'நாங்கள் செலுத்தியிருக்கிற துதிஸ்தோத்திர பலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ள' ஜெபிக்கிறோம். தேவனைத் துதிக்கவும் ஸ்தோத்திரிக்கவும் ஏற்ற ஆராதனை இதுவே. அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அப்படியே பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணின கிரியைகளைக் குறிக்கிறது.

4. அப்பம் பிட்குதல். (பரி. லூக்கா 24: 35, அப். 2: 2:46 20: 7-11.) இந்த ஆராதனையில் அப்பம் பிட்கும் ஒரு சம்பவத்தினிமித்தம் இப்பெயர் ஆராதனை முழுவதற்கும் அமைந்துள்ளது.

5. பரிசுத்த இரகசியம். மூன்றும் பத்திமதியிலும், திரு வியாழனுக்குரிய விசேஷ முகவுரையிலும் காண்கிறோம். 'இரகசியம்' என்றால் ஆரம்பத்தில் விளங்காத மறை பொருளாயிருந்தாலும் வெளிப்படுத்தலினால் நாம் கண்டடைந்து அனுபவிக்கக் கூடியது.

மாஸ், பஸ்கா, பலி முதலிய பெயர்களையும் பலர் உபயோகித்ததுண்டு.

III. பரி நற்கருணை ஆராதனை முறைமையை விளக்கும் ஓர் உவமானம்.

ஆராதனை முறைமையை நன்றாய் அறிந்துகொள்ள, கனம் டெல்வி ஐயரவர்கள் இயற்றி, ஒரு சிறு நூலாகப் பிரசுரமாக்கின உவமானம் ஏற்றது. பரி. நற்கருணை ஆராதனையை, ராஜாதி ராஜாவைத் தரிசிக்கப் போவதாக உவமானித்து எழுதியிருக்கிறார். அந்த உவமானத்தை நன்கு அறிய ஒரு ஆலயத்தை (பாளையங்கோட்டை அத்தியக்ஷ ஆலயம் நாசரேத் பரி. யோவான் ஆலயம்) நினைத்துக்கொள்வது நல்லது. ஆலயத்திற்கு முன் கூடமும் சுற்றித் தோட்டமும் இருக்கிறது. ஆலயப் பிராகாரத்தின் முகப்பு வாசலில் ஓர் சேவகன் இருக்கிறான். அவன் நமது கையிலுள்ள தடியையும் காலின் செருப்பையும் அவ்விடத்தில் வைத்துவிடச் சொல்லுகிறான். (அது கர்த்தருடைய ஜெபம் — உலக சிந்தையை எல்லாம் விட்டுவிடவும்). பக்கமாய் ஒரு தொட்டியில் தண்ணீரும் முகம் பார்க்கும்படி கண்ணாடியும் இருக்கிறது. தண்ணீரில் கால், கை, முகம் சுத்தம்செய்து (இருதய சுத்தத்திற்காக ஜெபம்) கண்ணாடியில் தனது தலை, முகம், தன்னையே முழுவதும் பார்த்துக்கொள்ளுகிறான். (பத்துக் கற்பனை — தன்னைச் சீர்தூக்கிப்பார்க்க). உள்ளே போக இரு பக்கங்களிலும் மரங்களுண்டு. (ஒன்று ராஜாவுக்காக ஜெபம். அடுத்தது அந்த

ஞாயிறுக்குரிய சுருக்க ஜெபம்.) அம்மரங்களைக் கடந்து செல்ல இடது பக்கத்திலும், வலது பக்கத்திலுமுள்ள தோட்டங்களிலிருந்து இனிய சத்தம் கேட்கிறது. இடது பக்கத்திலிருந்து இராஜாவின் ஊழியரின் சத்தம். வலது பக்கத்திலிருந்தோ இராஜாவினுடைய சத்தம். (ஊழியரது சத்தம் — நிருப வாக்கியம்; இராஜாவினுடைய சத்தம் — சுவிசேஷ வாக்கியம்.)

முன் கூடத்தின் படியில் ஒரு பணிவிடைக்காரனிருந்து 'நீ ராஜாவைத் தரிசிக்கப் போகவேண்டுமானால் நீ ராஜ விசுவாசியா? துரோகியா? என நான் பரிசோதிக்குமாறு, உனது விசுவாசத்தை அறிக்கையிட்டு இதில் கையொப்பம் இடு' என்கிறான். (நீசெயா விசுவாசப் பிரமாணம்) அவன் பக்கத்தில் ஒரு காணிக்கைப் பெட்டியிருக்கிறது. பிரியமானால் காணிக்கை போடலாம். பலர் போடுகிறார்கள். அது ஏழைகளுக்காக வழங்கப்படும் (காணிக்கை). முன் கூடத்தில் பிரவேசிக்க, போதுமான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். பல ஜாதியார், பல நிலைமையிலுள்ளவர்கள். (பல சபைக் கிறிஸ்தவர்கள், ராஜாக்கள், பிரபுக்கள், அதிகாரிகள், அத்தியக்ஷர்மார், குருமார், அந்தச் சபையைச் சேர்ந்தவர்கள், துன்பம் துக்கம் வறுமை வியாதிப்பட்டவர்கள்). இவர்கள் இராஜ தரிசனைக்குப் போகிறவர்களிடம் தங்களுக்காக இராஜாவை மன்றாடும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். அந்த முன் கூடத்திலேயே, ஆலயத்தினுள் பக்தர்கள், மரித்துப்போன விசுவாசிகள் தேவனை ஆராதிக்கும் காட்சி புலப்பட அவர்கள் நிமித்தம் கர்த்தரைத் துதித்து அவர்களோடு சேர்ந்துகொள்ள விரும்புகிறோம். (போராடுகிற கிறிஸ்து சபைக்காக ஜெபம்).

ஆலயத்திற்குள் பிரவேசிக்கும்படி எத்தனிக்க, அங்குள்ள ராஜ சமுகத்தின் மகிமையும், தூதர்கள், பரிசுத்தவான்களின் மேன்மையும், நமது அபாத்திரத் தன்மையையும் அசுத்தத்தையும் உணரச் செய்கிறது. உள்ளேயிருந்து பிரகாசிக்கிற ஒளியில் நமது உடுப்பு அசுத்தமாகக் காணப்பட்டு நாம் பின் வாங்க நினைக்கிறோம். அப்பொழுது ஒரு ஊழியன் நம்மை நோக்கி, முழங்கால்படியிட்டு பாவங்களை அறிக்கையிடு என்று சொன்னபடி (புத்திமதி) நாம் அறிக்கை செய்த பின் (பாவ அறிக்கை) ஊழியக்காரன் தமது கையை உயர்த்திப் பாவ விமோசனம் கூற நாம் சுத்தமாகிறோம். (பாவ விமோசனம்). அப்பொழுது ஆலயத்தின் வாசலில் கிறிஸ்துவானவர் தாமே வந்து 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, ...', 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ....' என்னும் இரு வசனங்களையும் கூறி நம்மை அழைத்து ஆறுதல்படுத்த, அவரது ஒரு பக்கத்தில் பரி. பவுல் நின்று 'பாவிகளை இரட்சிக்க.........' என்றும், மறு பக்கத்தில் பரி. யோவான் நின்று 'ஒருவன் பாவஞ்செய்வானானால்.........' என்றும் கூறி நம்மைத் தேற்றுகிறார்கள். (ஆறுதலான வார்த்தைகள்). நாம் ஆலயத்திற்குள் பிரவேசிக்க நமது காலைத் தூக்கி வைக்கிறோம். (உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்). உள்ளே

தூதர்களும் பிரதான தூதர்களும் பரம சபையும் தேவனைத் துதித்துப் புகழ்ந்து போற்றிக் கொண்டிருக்க நாமும் இவர்களோடு சேர்ந்து தேவனைத் துதிக்கிறோம். (முத்துதிக்கீதம்). நேரே திருமேசையில் நல்ல வெள்ளைத்துப்பட்டி விரிக்கப்பட்டு, பிரதிஷ்டைபண்ணப்பட்ட அப்பமும் திராட்சரசமும் இருக்க, நமது அபாத்திரத் தன்மையை உணர்ந்து தேவனுடைய இரக்கத்தை நம்பி, கிராதியில் முழங்கால் படியிட்டு வாங்கி உட்கொள்ளுகிறோம். அச்சமயம் கிறிஸ்துவைத் தவிர வேறு எண்ணமே உண்டாகிறதில்லை. ராஜாவாகிய கிறிஸ்துவைத் தரிசித்து அவரோடு பந்தியிருக்கிறோம். பந்தியிருந்த பின் நமது வாயிலிருந்து புறப்படுகிறது சர்த்தருடைய ஜெபமே. அப்பால் வலது பக்கமாகவோ இடது பக்கமாவோ ஆலயத்தின் முன் பகுதிக்கு வர அச்சுவரில் அருமையான காட்சிகளையும் படங்களையும் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் பலியின் காட்சி, துதிதோத்திர பலி, கிறிஸ்துவின் பாடு அல்லது பலி, நம்மைப் புத்தியும், பரிசுத்தமும், ஜீவனுமுள்ள பலியாகப் படைக்கிறோம் (சரீர ஆத்ம அர்ச்சனை ஜெபம்); அடுத்த பக்கம் ஐக்கியங்களை விளக்கும் காட்சி. உத்தம விசுவாசிகளின் கூட்டம், பரிசுத்த ஐக்கியம் (ஸ்தோத்திர ஜெபம்). ஆலயப் பாகத்தில் வர அங்கு தேவதூதர்கள் ஓயாமல் பாடிக்கொண்டிருக்க நாமும் சேர்ந்து பாடுகிறோம். (உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்......) நாம் வெளியேற வாசலின் பக்கமாய் ஒருவர் இருந்து இராஜ தரிசனம் பெற்றவர்களுக்கு இரண்டு சன்மானங்களைக் கொடுக்கிறார். அவைகளைப் பெற்றுக் கொண்டு வீட்டில் போய்ப் பார்க்க, ஒன்றில் தேவ சமாதானம், மற்றதில் ஆசீர்வாதம். (ஆசீர்வாதம் கூறுதல்).

IV. ஆராதனை முறைமை ஆயத்தம்

பரி. நற்கருணை ஆராதனை இரண்டு தன்மையுள்ளது :—

1. பலியின் தன்மை. இந்த ஆராதனையில் உபயோகிக்கப்படும் அநேக வார்த்தைகள் பலி சம்பந்தமானவை.

2 விருந்தின் தன்மை. சீர்திருத்தக்காரர் சாக்கிரமெந்தின் தன்மையை இன்னதென்று விளக்கிக் காட்டும் மனத்தவராய், கர்த்தருடைய நியமத்திற்கு அதைச் சம்பந்தப்படுத்த வேண்டி அதற்கு இசைவான பெயர்களாகிய 'கர்த்தருடைய ராப்போஜனமாகிய பரி. நற்கருணையைக் கொடுக்கும் முறைமை' என்பதை நமது ஆராதனை முகப்பில் வரைந்து எழுதினார்கள்.

ஆரம்பத்தில் நாலு (ரூபிரிக்) சட்டங்கள் இருந்தன. முதல் மூன்று பரி. நற்கருணை பெறப் போகிறவர்களையிட்டுள்ளது.

1. 1-ம் சட்டம் முந்தின நாளுக்குள் குருவானவருக்குத் தங்கள் பெயர்களைக் கொடுக்கவேண்டும்.

போதுமானபடி அப்பமும் திராட்ச ரசமும் தயார்செய்து கொள்ளு வதற்காகவும், அடுத்த இரு சட்டங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறபடி குருவானவர் எச்சரித்து ஏற்பாடு செய்வதற்காகவுமே. இந்தச் சட்டம் கைக்கொள்ளப்பட, குருவானவர் பரி. நற்கருணைக்கு முந்தின இரவு ஆயத்த ஆராதனை ஒழுங்குசெய்து, ஆயத்த ஆராதனைக்கு வந்தவர்கள்தான் பரி. நற்கருணை ஆராதனைக்கு வரலாம் என்னும் பழக்கத்தை உண்டாக்கலாம். அபாத்திரமாய் ஆண்டவரின் அப்பத்தைப் புசித்து அவர் பாத்திரத்தில் பானம் பண்ணுகிறவன் எவனோ அவன் ஆண்டவரின் சரீரத்தையும், இரத் தத்தையும் பற்றிய விஷயத்தில் குற்றத்திற்காளாகிறான்.' I கொரி. 11: 7. ரோமான் சபையில் 'பாவ சங்கீர்த்தனம்' செய்துதான் பரி. நற்கருணைக்கு வரவேண்டுமென்னும் சட்டம் கண்டிப்பானது. நமது சபை அதைக் கட்டாயப்படுத்தாமல் ஜனங்களின் மனநிலைக்கு விட்டிருக் கிறது. ஒரு கிறிஸ்தவன் குருவானவரிடம் வந்து தன் பாவங்களை அறிக் கையிட மனமாயிருந்தால், அதற்கு இடமுண்டு. கட்டாயம் இல்லை. சிலருக்கு அது அதிகப் பிரயோஜனமுள்ளதென்று தோன்றுகிறது.

2-ம் சட்டம் 'வெளியரங்கமாய்ப் பாவஞ்செய்து துன்மார்க்கன் என்று பேர் பெற்றவனையும், பிறனுக்கு அநியாயஞ்செய்து சபைக்கு வெட்கம், அபகீர்த்தி, அல்லது இடறல் உண்டாக்குகிறவனையும் குரு வானவர் எச்சரித்து அவசியமானால் பரி. நற்கருணைப் பந்திக்கு வராமல் தடுக்கலாம்'.

3-ம் சட்டம் 'வர்மித்துச் சண்டை போடுகிறவர்களையும், எச்ச ரித்து பந்தியில் சேர இடங்கொடுக்கலாகாது.' எவ்வகையிலும் எச்சரிப்பு அவசியமே. எச்சரிப்பில்லாமல் சிட்சை செய்வது திருச்சபை ஒழுங் கல்ல. இச்சட்டங்களின்படி யாரையாவது குருவானவர் பரி. நற்கருணைப் பந்திக்கு விலக்கியிருப்பாரானால், அதை பதினாலு நாட்களுக்குள் அத்திய க்ஷருக்குத் தெரிவிக்கவேண்டும். அத்தியக்ஷர் சட்டப்படி விசாரணை செய்து ஏற்பாடு செய்வார். சபையின் கிரம சிட்சையே சீர்திருத்தக்காரர் வற்புறுத்தின ஓர் விஷயம். சபைச் சிட்சை அத்தியக்ஷரவர்களைப் பொறுத்தது. இந்தச் சட்டத்தின்படி தற்காலத்துக் குருமார் செய்தார் களாயின், திருச்சபையில் காணப்படும் அநேக தீமைகளை விலக்குவதற்கு அது மிகவும் உபயோகமாயிருக்கும்.

4-ம் சட்டம் சற்று விசேஷமும் கஷ்டமுமானது. ஆராதனை யைப்பற்றி சீர்திருத்தக்காரருடைய போக்குக்கு இசைய கிரேக்குச் சபையில் எப்பொழுதும் வழங்கிவந்த 'மேசை' என்னும் பதம், ரோமான் சபையில் முன் வழங்கி வந்துள்ள 'பீடம்' என்னும் பதத்திற்குப் பதிலாக வழங்கப்படுகிறது. 'பீடம்' என்னும் பதம் தற்சமயம் ராஜாவின் பட்டா பிஷேக ஆராதனையில் மட்டும் வருகிறது. திரு விருந்தின் தன்மைக்கு ஏற்க 'மேசை' என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருந்தாலும் 'பீடம்' என்னும் வார்த்தையும் சாதாரணமே. பீடத்தில் நமது திருமங்கிலி

யத்தையும் காணிக்கைகளையும் படைக்கிறோம்; துதி ஸ்தோத்திர பலி செலுத்துகிறோம்; கிறிஸ்துவின் பரிசுத்த பலியை நினைவு கூறுகிறோம். நம்மையே தேவனுக்குப் புத்தியும், பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறோம்.

சீர்திருத்தக்காரர் முன்னால் ஆலயத்தின் கீழ் அந்தத்தில் இருந்த பீடத்தை நீக்கி ஆலயத்தின் நடுவில் முக்கியமாய் சபையாருக்கு வசதியான இடத்தில் ஒரு மேசையை கிழ மேலாய்ப் போட்டு, பரி. நற்கருணைக் கென்று உபயோகித்து வந்தார்கள். முன் (1548) திரு மேசைக்கு முன் னின்று ஆரம்பித்த குருவானவர், மேசையோடு சேர்ந்து அதே ஸ்தானத் தில் அமைய மேசைக்கு வட பக்கத்தில் நிற்கிறார் (1552). பின்னால் மேசை ஆலயத்தின் கீழ் அந்தத்திற்குக் கொண்டுவரப்பட, இந்த ரூபிரிக் மாற்றிக்கொள்ளப்படவில்லை. ஆகவே சற்றுத் தாறுமாறாகக் காணப் படுகிறது. அவ்வாறே பிரதிஷ்டை ஜெபத்திற்கு முன்வரும் ரூபிரிக்கில் 'ஜனங்களுக்கு முன்பாக' என்பது மேசை ஆலயத்தின் நடுவில் இருக்கி றதை உத்தேசித்தும், 'குருவானவர் மேசைக்கு முன் நின்று' என்பது மேசை கீழ் அந்தத்தில் இருக்கிறதை உத்தேசித்தும் அமைந்துள்ளது என்பதைக் கவனிக்கலாம்.

பரி. நற்கருணை ஆராதனையைப் பொதுவாக மூன்று பாகமாகப் பிரிக்கலாம்:—

1. ஆயத்தபாகம்—இவ்வுலகத்தில் போராடுகிற திருச்சபைக்காகச் செய்யும் ஜெபம் முடிய.
2. பரி. நற்கருணை—பரிமாறுதல் முடிய.
3. ஸ்தோத்திர பாகம். இரண்டாம் கர்த்தருடைய ஜெபத்தி லிருந்து முடிய.

I ஆயத்த பாகம்

பரி. நற்கருணையைச் சேருகிறவர்கள் முன் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு புது ஜீவனுள்ளவர்களாய் நடக்க உறுதி யாய்த் தீர்மானம் பண்ணுகிறோமா வென்றும் தேவன் கிறிஸ்துவின் மூல மாய் அருளிய இரக்கத்தில் உயிருள்ள விசுவாசம் வைத்து அவருடைய மரணத்தை நன்றியறிதலோடு நினைவு கூறுகிறோமா வென்றும் எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்கிறோமா வென்றும் தங்களைச் சோதித் தறியவேண்டும் (ஞானோபதேச வினாவிடை).

1. மனஸ்தாபம். தேவனுடைய கற்பனைகள் வாசிக்கப்பட, நாம் சென்ற காலத்தில் கற்பனையை மீறினதற்காக, தேவனை நோக்கி, இரக்கத்திற்காக மன்றாடுகிறோம். (பின்னால் பாவ அறிக்கை ஜெபம் வருகிறது.)

2. விசுவாசம்:— தேவ வசனத்தினால் — வாசிக்கப்படும் நிருப வாக்கிய சுவிசேஷ வாக்கியத்தினால் நமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட

விசுவாசத்தை உறுதிப்படுத்தி, அதன் பலனாய் விசுவாச அறிக்கை (விசுவாசப் பிரமாணம்) செய்கிறோம்.

3. அன்பு. நாம் ஏழைகளுக்காகப் படைக்கும் தருமங்களும் மற்றும் காணிக்கைகளும், பலருக்காக நாம் ஏறெடுக்கும் ஜெபங்களும் (போராடும் திருச் சபைக்காக ஜெபம்) நமது அன்பின் கிரியைகளே.

கர்த்தருடைய ஜெபம். ஆராதனை நடத்துகிற குருவானவர் தம்மை விசேஷமாய் ஆயத்தஞ் செய்யவேண்டியவராயிருக்கிறார். கர்த்தர் ஆரோனைப் பார்த்து உரைத்ததாவது 'பலிபீடத் தண்டையில் கிட்டிச் சேர்ந்து, உன் பாவ நிவாரண பலியையும் செலுத்தி உனக்காகவும், உன் ஜனத்திற்காகவும் பிராயச்சித்தம் செய்'. (லேவி. 9. 7.) 'பிரதான ஆசாரியன் முன்பு சொந்த பாவங்களுக்காகவும் பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டும்' (எபி. 7: 27.) ஆகவே குருவானவருக்கு விசேஷித்த ஆயத்தம் தேவையே. ஆயத்தத்திற்கு ஏற்க கர்த்தருடைய ஜெபத்தைத் தனிமையாய்ச் சொல்லுகிறார். ஜனங்கள் 'ஆமென்' என்று மற்ற இடங்களில் சொல்வார்கள். இந்த ஒரே இடத்தில் மாத்திரம், ஜனங்கள் 'ஆமென்' என்று சொல்லாமல் இருக்கிறார்கள். (சில தமிழ் ஜெப புஸ்தகங்களில் இந்த 'ஆமென்' பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டது அச்சுப் பிசகு என்று கவனிக்கவும்). குருவானவர் மட்டும் தனிமையாய்ச் சொல்வது காலை ஜெபத்தில் முதலாவது வழங்கும் கர்த்தருடைய ஜெபத்திற்கு முன்னுள்ள ரூபிரிக்குக்குச் சற்று முரண்பாடாகிறது. இதுவும் அடுத்த சுருக்க ஜெபமும் குருவானவர் ஆராதனைக்கு முன் தம்மை ஆயத்தப்படுத்த உபயோகித்து வந்த ஓர் விசேஷ ஆராதனையின் பாகம். எப்படியும் கர்த்தருடைய ஜெபத்தோடு பரி. நற்கருணை ஆராதனை ஆரம்பிக்கிறது விசேஷமும் ஏற்றதுமே.

கர்த்தருடைய ஜெபம் இந்த ஆராதனையில் இரண்டு தடவை உபயோகப்படுகிறது. (அவ்வாறே நமது காலை மாலை ஆராதனையிலும்). ஆராதனையின் முதல் பாகம் தன்னிலே தனி ஆராதனை. இதில் ஞானஸ்நான ஆயத்தக்காரர் சேர்ந்து ஆராதிக்கலாம். அவர்கள் கர்த்தருடைய ஜெபத்தை ஏறெடுக்காமல் ஆராதிக்க நேரிடுவது ஏற்றதல்ல. மேலும் இரண்டாவது கர்த்தருடைய ஜெபம் துதியாகச் சொல்லப்படுவதால் இராஜ்யமும் வல்லமையும் என்னும் துதியோடு உபயோகிக்கப் படுகிறது.

இருதய சுத்திக்காக ஜெபம். எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து அறிகிறவரே சுத்திகரிக்கக் கூடியவர். நமது இருதயம் சுத்திகரிக்கப் படுவதின் நோக்கம்:-- 1. தேவனிடத்தில் பரிபூரணமாய் அன்பு கூறுவது. பாவம் மன்னிக்கப்பட்டிருக்க பயம் நீங்கி அன்பு உண்டாகிறது. 2. தேவ நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்துவது. துதிதோத்திர பலி செலுத்துவதினால். 'பராபரனே எங்கள் இருதயத்தை சுத்தி

கரியும்', காலை மாலை ஆராதனை மன்றாட்டிலும் இருதய சுத்தியோடு பரிசுத்த ஆவியானவர் சம்பந்தப்பட்டுள்ளவர்.

கற்பனைகள். பத்துக் கற்பனை அல்லது நமது இரட்சகர் கூறின கற்பனையின் சுருக்கம் (பரி. மாற்கு 12: 29-31) வாசிக்கப்படும். அமெரிக்காவிலுள்ள பரி. நற்கருணை ஆராதனையில் இரண்டையும் சேர்த்து வாசிக்கலாம் என்பது சட்டம். ஆண்டவர் கூறின கற்பனையின் சுருக்கத்தைச் சேர்த்து வாசிப்பதால் பத்துக் கற்பனைகளை என்னவிதமாய்த் தாற்பரியப்படுத்த வேண்டுமென்று குறிப்பிடுகிறது. பத்துக் கற்பனையின் வியாக்கியானம் ஞானோபதேச வினாவிடையில் நாம் தெளிவாக அறிகிறோம். கற்பனைகள் வாசிக்கப்படுவது சீர்திருத்தக்காரர் ஏற்படுத்திய ஓர் புது முறைமை விசேஷம். அதற்குக் காரணங்களாவன :—

1. சன்மார்க்க ஜீவிய பிரமாணங்களைப் போதிக்கவும்,

2. பத்துக் கற்பனையை மாற்றி, அவைகளில் சில விஷயங்களை எடுத்துப்போட சிலர் முயன்றதினாலுமே. (ரோமானித்தர் முதல் இரண்டு கற்பனைகளை ஒன்றாய்ச் சேர்த்து, சில வேளைகளில் இரண்டாம் கற்பனையை மறைத்து, பத்தாம் கற்பனையை இரண்டாகப் பிரித்து உபயோகித்தார்கள்).

3. விசுவாசத்தினால் இரட்சிப்பு உண்டு. ஆனபடியால் கற்பனை ஒன்றுமில்லை என்ற கொள்கைக்காரர் நிமித்தமும். (1604 வருஷத்து சபை சட்டங்களில் ஒன்று, 'ஜனங்கள் பார்க்க, வாசிக்கத் தக்கதான இடத்தில் ஆலயத்தின் கீழ்ப் பக்கத்தில் பத்துக் கற்பனைகளையும் எழுதி வைத்திருக்கவேண்டும்' என்பதே)

4. தேவனுடைய கற்பனைகளைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு நமது நடக்கையைப் பரிசோதித்து எந்த விஷயத்தில் மனோவாக்குக் காயங்களினால் குற்றஞ் செய்தோம் என்று கண்டறியவும்.

குருவானவர் ஜனங்களுக்கு நேரே திரும்பி தெளிவாய்க் கற்பனைகளை வாசிக்க, ஜனங்கள் முழங்காலில் நின்று இரக்கத்திற்காகவும் கிருபைக்காகவும் மன்றாடுகிறார்கள். கடந்த காலத்தில் அந்தந்தக் கற்பனையை மீறினதினாலே இரக்கமும் இனிவருங் காலத்தில் அதைக் கைக்கொள்ளும்படி கிருபையும் அவசியமே. முன் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் புது ஜீவனுள்ளவர்களாய் நடக்கக் கிருபையும் தேவையே. 'என் பிரமாணங்களை அவர்கள் மனதில் வைத்து, அவர்கள் இருதயத்தில் அவைகளை எழுதுவேன்' (எபி. 8.) என்ற திருவாக்குக் கிசைய, கற்பனைகள் வாசித்துமுடிய 'எங்கள் இருதயங்களில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்' என்று மன்றாடுகிறோம்.

பத்துக் கற்பனையை சத்திய வேதத்தில் இரண்டு இடங்களில் காண்கிறோம். (யாத். 20; உபா. 5.) ஒப்பிட்டால் சிறு வித்தியாசத்தைக் காணலாம். நமது ஜெப புஸ்தகத்தில், ஞானோபதேச வினாவிடையிலும் பத்துக் கற்பனைகள் அடங்கியுள்ளன.

இராஜாவுக்காக ஜெபம். உலகின் சன்மார்க்க நிலை ராஜாவை, இராஜங்கத்தைப் பொறுத்தது. 'கோலுயரக் குடி உயரும்' (சன்மார்கத்திலும்) ஆகவே கற்பனைகள் வாசிக்கப்பட்டவுடனே ராஜாவுக்காக ஜெபிக்கிறோம். இராஜாவுக்காக ஜெபம் செய்வது ஆதித் திருச்சபையின் வழக்கம். நமது ஆண்டவரது சித்தம். ராயனுக்குச் செலுத்தவேண்டியதில் விசேஷமானது ஜெபமே. பரி. பவுல், பரி. பேதுரு காலத்தில் கிறிஸ்தவர்களை ரோம ராயர்கள் உபத்திரவப்படுத்தின சமயத்திலும், அவர்களைக் கனப்படுத்த அவர்களுக்காக ஜெபிக்கும்படி விரும்பினார்கள் (1 தீமோ. 2, 1 பேதுரு 4). தேவவசனத்திற்கும் நியமத்திற்கும் ஏற்ற விதமாய் அவருக்குள்ளும், அவருக்காகவும், இராஜாக்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது திருச்சபையின் எண்ணம். ஆக தேவசித்தத்திற்கும், திருச்சபைக்கும் முரண்படாதபடி நாம் ராஜாக்களுக்கு நமது கடமையை நிறைவேற்ற வேண்டும். ராஜ பக்தியைவிட தேவபக்தியே மேலானது. ராஜாக்கள் தேவனுடைய ஆளுகைக்குட் பட்டவர்கள் என்பதும் தேவனே அவர்களை நடத்துகிறார் என்பதும் சத்தியவேத உபதேசம் (நீதிமொழி 21:1). இரத்தச் சாட்சிகள் ராஜ ஆக்கினை நடுவிலும் தேவபக்தி சிரேஷ்டமெனப் பாராட்டினவர்களே.

ராஜாவுக்காக இரண்டு ஜெபங்கள் உண்டு. அவைகளில் ஒன்றைத்தான் உபயோகிக்க வேண்டியது. முதல் ஜெபம் — திருச்சபை, ராஜா, பிரஜைகள் இவைகளுக்காக ஜெபிக்கிறோம். இரண்டாம் ஜெபம் — ராஜாவுக்காக மட்டும் :— அவரது யோசனை, வார்த்தைகள், கிரியைகள் எல்லாவற்றிலும் தேவனுடைய கனத்தையும் மகிமையையும் விரும்பவும், பிரஜைகளை

சுகவாழ்விலும் — (லௌகீக நிலை)
சமாதானத்திலும் — (சன்மார்க்க நிலை)
தேவ பக்தியிலும் — (ஆவிக்குரிய நிலை)

கருதவும் ஜெபிக்கிறோம்.

ராஜாவுக்கும் பிரஜைகளுக்குமுள்ள சம்பந்தம் நன்றாய் இருக்க வேண்டுமானால் அது இருபக்கத்தாரையும் பொறுத்ததே. ஆகவே சமயத்திற்குத் தக்கதாக இரண்டு ஜெபத்தில் ஒன்றை வாசிக்கவேண்டும்.

அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம்

திருச்சபை வருஷம் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. அட்வெந்து முதல் திருத்துவ திருநாள்வரை கிறிஸ்துவானவரது ஜீவியவரலாற்றுச் சம்பந்தமானவைகளையும், திருத்துவ திருநாளுக்குப் பின்னுள்ள காலத்தில் கிறிஸ்தவ ஜீவியத்திற்கடுத்தவைகளையும் நாம் சிந்திக்க திருச்சபை நம்மை ஏவுகிறது. அதற்கிசைய, சுருக்க ஜெபங்களும் நிருப

வாக்கியங்களும் சுவிசேஷ வாக்கியங்களும் அமைந்திருக்கின்றன. நிருப சுவிசேஷ வாக்கியங்களின் முக்கிய பொருள், சுருக்க ஜெபத்தில் காண்கிறோம். சுருக்க ஜெபங்கள் ஒவ்வொரு ஞாயிறுக்கும் திருநாளுக்கும் உண்டு. ஜெப புஸ்தக அனுபந்தத்திலும் வேறு சுருக்க ஜெபங்களும் நிருப சுவிசேஷ வாக்கியங்களும் உண்டு. வருஷத்தின் 52 ஞாயிறுகள்.

அட்வெந்து ஞாயிறு		4 — 4
கிறிஸ்மஸ்க்கு பின் வரும் ஞாயிறு		1 or 2
பிரசன்னத் திருநாளுக்கு	,,	2 — 6
லெந்துக்கு முன் வரும்	,,	3 — 3
லெந்து நாட்களின்	,,	6 — 6
ஈஸ்தர்	,,	1 — 1
,, பின் வரும்	,,	5 — 5
பரமேறுதலுக்குப் பின்	,,	1 — 1
பரி. ஆவியின்	,,	1 — 1
திருத்துவ ஞாயிறு		1 — 1
		25 30
திருத்துவ திருநாளுக்குப் பின்		27 22
	ஆக	52 52

பிரசன்னத் திருநாளுக்குப் பின் வரும் ஞாயிறுகள் குறைய, திருத்துவ திருநாளுக்குப் பின் வரும் ஞாயிறுகள் அதிகப்படும்.

திருநாட்கள்

கிறிஸ்துவானவர் பிறப்பு, விருத்தசேதனம், பிரசன்னம், உபவாசம், மறுரூபம், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல்.

கன்னிமரியம்மாள் — மங்கள வாக்கு, சுத்தி கரிப்பு

அப்போஸ்தலர் — பர்னபா, பவுல் அப்போஸ்தலராகிய மாட்சிமை பொருந்திய கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

(பிலிப்போடு யாக்கோபும், சீமோனோடு யூதாவும் சேர்த்துக் கொண்டாடப்படுவது வழக்கம்.)

லூக்கா, மாற்கு, யோவான் ஸ்நானகன், மகதலேனுமரியாள், ஸ்தேவான், குற்றமில்லாப் பாலகர், சகல பரிசுத்தவான்கள், பரிசுத்த மிகாவேலும் சகல தேவதூதர்கள் பேராலும் திருநாட்களைக் கொண்டாடுகிறோம்.

ஞாயிறுகளில் பரிசுத்த நற்கருணை ஆசரிக்கப்படுவதுமல்லாமல் திருநாட்களிலும் அது ஆசரிக்கப்படுவது நல்லது.

சுருக்க ஜெபம். ஒரே விண்ணப்பம் அடங்கியுள்ளது. விண்ணப்பத்திற்கு ஏற்க ஏதாவது சத்தியத்தை அறிவித்து விண்ணப்பத்தின் நோக்கத்தை வெளியிட்டு, விண்ணப்பத்தைப் பொதுவாய், இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் ஏறெடுக்கிறது. எல்லாச் சுருக்க ஜெபங்களும் கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனுகிய பிதாவை நோக்கி ஏறெடுக்க, அட்வெந்துக்குப்பின் வரும் 3ம் ஞாயிறு. பரி ஸ்தேவான், லெந்து காலத்து முதலாம் ஞாயிறு சுருக்க ஜெபங்கள் நேரே கிறிஸ்துவானவரையே நோக்கினது. சுருக்க ஜெபம் அந்த நாள் அல்லது வாரம் முழுவதும், காலே, மாலே ஆராதனைகளில் உபயோகிக்கப்படுவதால் காலே மாலே ஆராதனை பரி. நற்கருணேயோடு சம்பந்தப்படுகிறது.

சுருக்க ஜெபம் வாசித்து முடிந்தவுடனே நிருபவாக்கியம் வாசிக்கப்படுகிறது. பொதுவாய் புதிய ஏற்பாட்டில் பல நிருபங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசன ஆகமங்களிலும், அப்போஸ்தல நடபடிக்கைகளிலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும், ஏற்றபாகம் இருக்கின் அவைகளும் நிருபவாக்கியத்திற்குப் பதிலாக வாசிக்கப்படுகிறது பண்டையக் காலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மூன்று வேதாகம பாகங்கள் வாசிக்கப்பட்டு வந்தன. இவற்றில் தீர்க்கதரிசன வாக்கியம் ஒன்ருகும். நம் சபை ஒழுங்கின்படி, மற்ற நாட்களில் தீர்க்கதரிசன வாக்கியம் வாசிக்கப்படாமல் சில விசேஷ நாட்களில் மாத்திரம் வாசிக்கப்படும். அந்த நாட்களில் நிருப வாக்கியம் வாசிக்கப்படாது. நிருப வாக்கியத்திற்குப்பின் சுவிசேஷ வாக்கியம் வாசிக்கப்படுகிறது. ஜீவனுள்ள கிறிஸ்துவையும் அவருடைய கிரியைகளையும் அவருடைய வசனங்களையும் ஜனங்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டுவது சுவிசேஷ வாக்கியம் வாசிக்கப்படும் நோக்கம். சுவிசேஷ வசனங்களின் மேன்மையைக் காட்டும்படி,

1. நிருப வாக்கியம் திருமேசையின் இடது பக்கத்தில் நின்று வாசிக்கிறதும் இது வலது பக்கத்தில் வாசிக்கிறதும் பழைய வழக்கம்.

2. நிருப வாக்கியத்தை வாசிக்கும்படி பட்டம் பெருத சில ஊழியருக்கு அநுமதி அளிக்கப்படும்; சுவிசேஷ வாக்கியத்தையோ பட்டம் பெற்றவர்கள் மாத்திரம் வாசிக்கலாம்.

3. சுவிசேஷ வாக்கியம் வாசிக்கப்படும் போது ஜனங்கள் வணக்கமாய் எழுந்து நிற்பார்கள்.

4. சுவிசேஷ வாக்கியம் ஆரம்பிக்குமுன் 'தேவரீருக்கே மகிமை உண்டாவதாக' என்றும், வாசித்தவுடனே 'கிறிஸ்துவுக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக' என்றும் சொல்வது அல்லது பாடுவது வழக்கம். (இது ஜெப புஸ்தகத்தில் இல்லே யென்று கவனிக்கவும்)

5. 'நிருப வாக்கியம் வாசித்து முடிந்தது' என்று சொல்ல, சுவிசேஷ வாக்கியத்திற்கு அப்படிச் சொல்லப்படுகிறதில்லே. பின் வரும் விசுவாசப் பிரமாணம் சுவிசேஷ வாக்கிய பாகத்தின் தொடர்ச்சியான அறிக்கையாக எண்ணப்படலாம்.

சுவிசேஷ வாக்கியத்தின் தொடர்ச்சியாகவும், மாறுத்தரமாகவும், விசுவாசப் பிரமாணம் சொல்லப்படுகிறது. விசுவாசம், கிறிஸ்து மார்க்கத்துக்கு அடிப்படையானது. பரிசுத்த யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலோடு விசுவாசத்தையும் வற்புறுத்தினர். கிறிஸ்துவானவரும் விசுவாசம் இல்லாத இடத்தில் அற்புதஞ் செய்யவில்லே. கிறிஸ்துவின் மூலமாய் அருளப்படும் இரட்சிப்பை விசுவாசத்தினுல் நாம் அடைகிறேம். சாக்கிரமெந்தைப் பெற வருபவரிடம் விசுவாச மிருத்தல் அவசியமே. விசுவாசம் வெறும் அறிவல்ல; அது ஜீவியத்தைப் பொறுத்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஜீவிப்பதே ஏற்ற விசுவாசம். (பரி. யோவான் 1 : 12).

விசுவாசப் பிரமாணத்தில் அடங்கியவைகள் பரிசுத்த வேத வாக்கியங்களினுலே யாதொரு சந்தேகமுமின்றி ரூபிக்கக் கூடியவை. நீசெயா விசுவாசப் பிரமாணம், அதநாஷியஸ் என்பவரின் விசுவாசப் பிரமாணம், அப்போஸ்தலருடைய தென்று சொல்லப்படுகிற விசுவாசப் பிரமாணம் ஆகிய மூன்று நமது திருச்சபையில் வழங்கும். நீசெயா விசுவாசப் பிரமாணம் 5-ம் நூற்றுண்டிலிருந்து கிழக்கத்தி சபைகளில் பரி. நற்கருணை ஆராதனையில் வழங்கப்பட்டு வருகிறது. இது செசரியா சபையில் வழங்கப்பட்டு வந்த விசுவாச அறிக்கையை அநுசரித்து, சில வித்தியாசங்களுடன் 325-ம் வருஷம் நீசெயாவில் கூடின சங்கத்தாராலும், இப்பொழுது இருக்கிறபடியே, 451-ம் வருஷம் கல்சிதோனில் கூடின சங்கத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. கிறிஸ்துவானவர் மெய்யான தெய்வமல்ல என்ற ஆரியரது கள்ள உபதேசத்தை நிராகரிக்க இச்சங்கம் கூடி இவ்விசுவாச அறிக்கையை வெளியிட்டது. ‘பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்’ என்பதோடு அச்சமயம் முடிவடைந்தது. திருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி தெளிவாயும் விஸ்தாரமாயும் கூறப்பட்டிருக்கிறது. பின்னுல் பரிசுத்த ஆவியானவருடைய தெய்வத் தன்மையை மறுத்த மஸிடோனியு என்பவன் கொள்கையை கண்டிக்குமாறு, கொன்ஸ்ருன்றிநேபுரி என்னும் இடத்தில் 381-ம் வருஷத்தில் கூடின சங்கத்தார் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய விசேஷங்களைக் கூட்டிச் சேர்த்தார்கள்.

‘குமாரனிலும்’ (நின்று புறப்படுகிறவருமாய்) என்னும் பதம் 589-ம் வருஷம், ஸ்பெயின் தேசத்திலுள்ள தொலேதோ என்னும் கூட்டத்தில் சேர்க்கப்பட்டது. Toledo என்னும் கூட்டம் சபையின் பொதுக் கூட்டம் இல்லாததால் கிழக்கத்திச் சபைகள் இப்பதத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லே. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியானபடியாலும் (கலா. 4 : 6), அவர் கிறிஸ்துவினுல் அனுப்பப்படுகிறபடியாலும் (யோ. 16 : 7) அவர் குமாரனினின்று புறப்படுகிருர் என்பது சரியே. இந்தப்

பதம் மேற்கத்திச் சபைக்கும், கிழக்கத்திச் சபைக்கும் ஏற்பட்ட பிரிவினைக்கு ஓர் காரணம்.

அறிவிப்பு. ஆராதனை நடத்துகிறவர் தவிர வேறு ஒருவரும் எவ்வித அறிவிப்பும் செய்யக் கூடாது. அவரும் தன் இஷ்டப்படி விளம்பரஞ் செய்யக் கூடாது. (1) திருச்சபை ஒழுங்குக்கும், (2) இராஜ கட்டளைக்கும், (3) அத்தியட்சரின் கட்டளைக்கும் இசைந்தவைகளை மட்டும் விளம்பரஞ் செய்யலாம்.

1. (a) திருச் சபையின் ஒழுங்குப்படி அந்த வாரத்திலுள்ள திரு நாட்களையும், உபவாச நாட்களையும் அறிவிக்க வேண்டும். அவைகளை ஏற்றவாறு ஆசரிக்க வேண்டு மென்பது திருச் சபையின் நோக்கம்.

திரு நாட்கள். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தினிமித்தம், அவர்களது ஜீவியம், ஊழியம் முதலியவைகளைப் பின்தொடரும் நோக்கத்துடன் அவைகளைச் சிந்தித்துக் கொண்டாடுகிறோம். பரி. நற்கருணை ஆசரிப்பதும் அந்நாளுக்குரிய விசேஷ பாடங்களை வாசிப்பதும் திரு நாளைக் கொண்டாடும் முறைமை.

உபவாச நாட்கள். உபவாசம் தேவபக்திக்கு அனுகூலமானது. கிறிஸ்துவானவரும் உபவாசித்தார். உபவாசத்தைப்பற்றி உபதேசித்தார் (பரி. மத்தேயு 6: 17; 9: 15). திருச் சபையில் இது பாரம்பரியமான ஓர் வழக்கம். தேவனுடைய திவ்ய ஏவுதலுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கும்படி நமது சரீரம் ஆவிக்கு அடங்கத்தக்கதாய் நாம் உபவாசிக்க வேண்டியது. உபவாச நாட்களின் அட்டவணை நமது ஜெப புஸ்தகத்தில் உண்டு. உபவாசம் என்பது வழக்கமான ஆகாரத்தைக் குறைத்தோ வெறுத்தோ ஜீவிப்பது. ஆரம்பத்தில் அன்று சாயந்தரம் மட்டும், பின்னால் மத்தியானம் மட்டும் உபவாசத்தைக் கையாடுவது வழக்கம். (விரதம்) ஆகாரத்தின் தன்மையைக் குறைப்பது, மாம்சம் புசியாமை, சுருட்டு, காப்பி முதலியவைகளை நிறுத்துவார் உண்டு.

(b) பரி. நற்கருணை பரிமாறும் காலத்தை அறிவிக்கவும் வேண்டும். ஞாயிறுகளிலும் திரு நாட்களிலும் பரி. நற்கருணை ஆசரிக்கப்படவேண்டு மென்பது திருச் சபையின் நோக்கம்.

(c) இந்த இடத்தில் விவாக அறிவிப்புகள் வாசிக்கப்படும். அவ்வாறு ரூபிரிக்கில் 1805 வருஷம் வரை சொல்லப்பட்டிருந்தது. சில இடங்களில் காலை ஆராதனை ஒழுங்காய் இல்லததால், 'காலை ஜெபம் இல்லாவிட்டால் மாலை ஜெபம் நடக்கும் போது 2-ம் பாடம் வாசித்தவுடனே குருவானவர் விவாக அறிவிப்பு கூறலாமென்ற 1753-ம் வருஷத்தின் சட்டத்தினிமித்தம், தவறுதலாய் 1805 வருஷம் விடப்பட்டது. 1928-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஜெப புஸ்தகத்தில், விடப்பட்ட வார்த்தைகள் மறுபடியும் சேர்க்கப்பட்டன.

2. ராஜ கட்டளையின்படியானது. இங்கிலாந்து சபைக்கும் ராஜாங்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தமிருந்ததால் (தற்சமயம் இந்திய

திருச் சபைக்கு அவ்வித சம்பந்தம் இல்லை), ஆலயக்கட்டுமானம், பழுது பார்த்தல் முதலியவைகளுக்கு உதவி செய்யவும் பலர் பெரிய சேதமடையின் அவர்களுக்குத் தர்ம உதவி செய்யவும் ராஜ ஆஞ்ஞைக்கு இசைவாக, ஆலயத்தில் ஜனங்களுக்கு அறிப்பது வழக்கமாயிருந்தது.

3. அத்தியட்சருடைய கட்டளையின்படியானது. திருச் சபைக்குப் புறம்பாக்கும் தீர்ப்புகள் முதலியவற்றை வாசிக்கலாம்.

அடுத்த ரூபிரிக்கில் பிரசங்கஞ் செய்யும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜெப புஸ்தகத்தில், பரி. நற்கருணை ஆராதனை சம்பந்தமாய்த் தான் பிரசங்கஞ் செய்யவேண்டுமென்று திட்டமாய்க் கற்பித்திருக்கிறது. பரி. நற்கருணையைப்பற்றிய சரியான அறிவு உண்டாக்கவும் பரி. நற்கருணைக்கு ஆயத்தப்படுத்துமாறும் பிரசங்கஞ் செய்யப்படுவது நலம். (குருபட்ட ஆராதனையிலும் விவாக ஆராதனையிலும் பிரசங்கம் உண்டு). காலை மாலை ஆராதனை முடிந்தவுடனே பிரசங்கஞ்செய்வது பண்டைக்காலத்து வழக்கமல்ல. பரி. நற்கருணை அடிக்கடி ஆசரிக்கப்படாத காலங்களில் அந்த வழக்கம் ஏற்பட்டது. நெகேமியா 8: 8-க்கு ஏற்க வாசிக்கப்பட்ட சுவிசேஷ நிருப வாக்கியங்களின்பேரில் புத்திமதிகள் சொல்லப்பட்டது. தர்க்கத்துக்கும் தப்பிதமான எண்ணங்களுக்கும் ஏதுவானவைகளை நீக்கவும் சத்திய உபதேசத்தையே அறிவிக்கவும், அக்காலத்துக் குருமாரை அதிக தகுதியுள்ளவர்களாக்கும்படி ஏற்ற உதவியாகவும், பிரசங்கங்கள் எழுதப்பட்டு அச்சிடப்பட்டன. அவைகளில் இரண்டு புஸ்தகங்கள் தான் வெளியாயின. முதலாம் புஸ்தகம் 1547ம் வருஷம் 6வது எட்வர்ட் ராஜாவின் காலத்தில் கிரான்மர் ரிட்லி லாற்றிமர் இவர்களது முயற்சியாலும், இரண்டாம் புஸ்தகம் 1562ம் வருஷம் எலிசபேத்தின் காலத்தில் ஜூயல் அத்தியட்சர் முயற்சியாலும் வெளியிடப்பட்டன.

காணிக்கை வாசகம்

20 வாக்கியங்கள் உண்டு. அவைகளில் ஒன்றையாவது சிலவற்றையாவது வாசிக்கலாம். அவைகளில் 2 தள்ளுபடி ஆகமத்தில் தோபித்தின் புஸ்தகத்திலிருந்தும், பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகளில் ஒன்றும், சங்கீத புஸ்தகத்தில் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது. மற்றவைகள் புதிய ஏற்பாட்டிலிருந்தே, மலைப் பிரசங்கத்திலிருந்து நான்கு வசனங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(1) 1–5 வாக்கியங்கள் தர்மத்தைப்பற்றி பொதுவானவை. (சகேயுவின் நல்ல திருஷ்டாந்தம்).

(2) 6–10 திருச் சபைப் பணிவிடையையும் பணிவிடைக்காரரையும் பராமரிக்கவும்.

(3) 11–20 ஏழைகள் விஷயமாய்ச் செய்யும் தர்மத்தைப்பற்றிய கடமையும் ஆசீர்வாதமும் கூறப்பட்டிருக்கிறது.

வாக்கியங்கள் வாசிக்கையில் தர்மங்களும் காணிக்கைகளும் ஜனங்களிடத்தில் வாங்கப்பட்டுத் திரு மேசையின்மேல் படைக்கப்படும். பொதுவாய் இரண்டொரு வாக்கியத்தை வாசித்து ஒரு பாட்டுப்பாட காணிக்கை வாங்கப்படும். பாட்டு பாடிக்கொண்டிருக்க காணிக்கை போடுகிறது, காணிக்கை படைக்கப்படும் நோக்கத்தை ஏற்றவாறு சிந்திப்பதற்குத் தடையாகும். தகுந்த உணர்வோடு காணிக்கை படைக்கச் சபையார் பழகவேண்டும். நாம் காணிக்கையோடு நம்மையே தேவனுக்குப் படைக்கிறோம். காணிக்கை படைப்பது ஆராதனையின் முக்கிய நோக்கம். ஜெப புஸ்தகத்தில் பரி. நற்கருணை ஆராதனை நீங்கலாக, பிரசவ ஸ்தோத்திர ஆராதனையிலும், பரிசுத்த விவாக ஆராதனையிலும் காணிக்கை செலுத்தும் வழக்கத்தைக் கவனிக்கிறோம்.

தேவனுக்குக் காணிக்கை செலுத்துவது ஒரு பெரிய சிலாக்கியம். எவ்வித சங்கடத்தோடு, கட்டாயம் என செலுத்தவேண்டாம். அன்போடு நாம் காணிக்கை செலுத்த வேண்டும். ' எனக்குண்டான எல்லாவற்றையும் நான் தானம் பண்ணினாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை '. காணிக்கை செலுத்துவது நமது அன்பின் கிரியையே. தேவன் நம்மிடத்தில் பாராட்டி வரும் அன்பினிமித்தம் தேவனுக்குள் நாம் மற்றவர்களுடன் பாராட்டும் அன்புக்கு அறிகுறியாகக் காணிக்கை படைக்கிறோம். நாம் தேவனிடத்தில் அன்பு கூறவேண்டும், பிறனிடத்தில் அன்பு கூறவேண்டும் என்ற கற்பனைகளைக் காணிக்கை படைப்பதில் ஒருவாறு நிறைவேற்றுகிறோம்.

ஆலயத்தில் காணிக்கை கொடுப்பது போதுமென நாம் எண்ணக் கூடாது. நற்கிரியைகளும் அவசியமே. கிறிஸ்துவானவர் இடைவிடாமல் நற்கிரியைகளைச் செய்து கொண்டு வந்தாரென்று சுவிசேஷங்களில் நாம் வாசிக்கலாம் (குருடர், சப்பாணிகள், குஷ்டரோகிகள், செவிடர் முதலியவர்களிடத்தில் அவர் செய்த பணிவிடை). தற்காலத்திலும் ஆலயக்கட்டுமானம், வைத்தியம், பாட்டுவரம், ஏழைகளைப் பராமரித்தல் முதலியவைகள் ஏற்ற நற்கிரியைகளே. இவைகளினால் நமது பரம பிதாவை மகிமைப்படுத்துகிறோம் (வசனம் 1, 3, 4,). ஆலயத்துக்கு வரக் கூடாதவர்களுக்கு உதவி புரியலாம். உவெஸ்த்மின்ஸ்தர் பேராலயத்தைக் கட்டின நற்சாட்சியான எட்வர்ட் ராஜா ஆலயத்துக்கு வரக்கூடாத ஒரு ஏழை முடவனை பரி. நற்கருணைக் கிராதி அண்டைக்குத் தாம் தூக்கிச் சுமந்து போனதாக சரித்திரம் உண்டு.

நமது காணிக்கையை உதாரத்துவமாகவும் (பிசினித் தனமாயல்ல, வெகுதாராளமாய்) உற்சாகமாயும் (சந்தோஷமாய், விசனமாயும் கட்டயமாயுமல்ல) செலுத்தவேண்டும்.

காணிக்கை வாசகங்களில் தரும காணிக்கை செலுத்துவதின் பல நோக்கங்களை அறிகிறோம்.

1. ஏழைகளை ஆதரிப்பது (19, 17). ஏழைகளுக்காகத் தருமங்கள் ஜனங்களிடத்தில் வாங்கப்படுவதாக ரூபிரிக்கில் வாசிக்கிறோம். ஏழைகளை ஆதரிப்பது ஆதித் திருச்சபை செய்து வந்த ஊழியம் (அப். 6: 1, கலா. 2: 10).

2. தேவ பணிவிடையையும், பணிவிடைக்காரரையும் பராமரிக்கிறது. இது எந்த மார்க்கத்திலும் கடமையும் வழக்கமுமே. யூத மார்க்கத்தில் சமாதான பலி செலுத்தப்படுமானால் வலது முன்னந் தொடை பலி செலுத்தும் ஆசாரியனுடைய பங்கு: மார்க்சண்டமும், மற்றும் முன் தொடையும் ஆரோனுக்கும் அவன் குடும்பத்துக்கும் உரியது (லேவி. 7: 33. 34). தசமபாகம். தேவ பணிவிடைக்காருக்காகவே. நமது ஆண்டவருடைய உபதேசமும் 'வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரன். வீட்டுக்கு வீடு போகவேண்டாம்'. பரி. லூக். 10: 7. 'உங்கள் கச்சைகளில் பொன், வெள்ளி செம்பு காசுகளைத் தேடி வைத்துக்கொள்ள வேண்டாம்...வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரன்' பரி. மாற்கு 10: 9, 10. பரி. பவுல் அப்போஸ்தலன் சகலத்தையும் விட்டு பல கஷ்டங்களை உத்தரித்தும் தனது சொந்த கையினால் வேலை செய்து ஜீவனார்த்தம் பண்ணி சுதாவாய் ஊழியத்தை நடத்தி வந்தாலும், தேவ ஊழியர்களைப் பராமரிப்பது சபையின் கடமை என்பதை வற்புறுத்தியிருக்கிறார். (வாக். 6, 7, 8.)

சபை ஊழியர்களை ஆதரிக்கிறது தனது கடமை என்று உணராதவனும், ஏற்ற உதவி செய்யாதவனும் பரி. நற்கருணை பந்தி சேருவது தகுதி யல்ல வென்பது திருச் சபையின் அபிப்பிராயம். 'அந்தந்தச் சபையில் பரி. நற்கருணை பெறத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் வருஷந்தோறும் உயிர்த்தெழுந்த திருநாள் வாரத்தில் கணக்குப் பார்த்து தன் குருவுக்காவது அவருடைய பிரதிசாரியஸ்தருக்காவது சபைக்குரிய வரிப் பணத்தை வழக்கப்படி அவர்களுக்குச் செலுத்த வேண்டும்'.

3. சபைப் பரிபாலனம் (வ. 11, 14, 16). (விசுவாச வீட்டார் = திருச் சபை). யாவருக்கும், எல்லா மனிதருக்கும் விசேஷமாய்ச் சபையைச் சேர்ந்தவர்களுக்கும் நன்மை செய்யவேண்டும்.

4. நஷ்ட ஈடு (வ. 5) 'மற்றவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன்'. சகேயு. (ஏழைகளுக்கு ஆஸ்தியில் பாதி, நஷ்ட ஈடு 4 மடங்கு). நஷ்ட ஈடு செலுத்த முடியாவிட்டால், அதைச் செலுத்த மனமாயிருக்கிறோம் என்பதை ஆலயத்தில் காணிக்கையைப் படைப்பதால் நாம் தெளிவாய்க் காட்டுகிறோம்.

5. சிறுமைப்பட்டவர்கள், வியாதியஸ்தர், கஷ்டப்பட்டவர்களை ஆதரிப்பது (வ. 19. 20) சபையைப் பொறுத்தது. ஆஸ்பத்திரிகள் அநாத சாலைகள் கிறிஸ்து மார்க்கத்தின் பலாபலனே. அவைகள் உண்டாவதற்குக் கிறிஸ்துவின் உபதேசம் மூல ஆதாரம்.

'வாரத்தின் முதல் நாள்தோறும் ஒவ்வொருவனும் கடவுள் தன்னை ஆசீர்வதித்திருப்பதற்கு ஏற்க எடுத்து வைத்துக்கொள்வானாக' (1 கொரி. 16: 2). வாரத்தின் முதல் நாளில் (ஞாயிறு) பரி. நற்கருணை ஆசரிக்கப்படுவது ஆதித் திருச் சபை வழக்கம். பரி. பவுல் காணிக்கைகளைப்பற்றி இரண்டு நல்ல விதிகளை எடுத்துரைக்கிறார்.

(1) அது ஒழுங்காய்க் கொடுக்கப்படவேண்டும். (2) அது வரவுக்குத் தகுந்ததாக இருக்கவேண்டும் (2: 18). ஆகவே வருமானத்தில் காணிக்கையாகக் கொடுக்கக்கூடியது எவ்வளவு என்று தீர்மானித்துக் கொள்வது நல்லது. சிலர் பத்தில் ஒன்றைக் கொடுக்கிறார்கள். ஐசுவரியவான்கள் அவ்வாறு செய்தல் எளிது, அதற்கு அதிகமாயும் அவர்கள் செய்யலாம். எல்லாருக்கும் ஒரே விதி பொருந்தாது. ஏழைகள் சிறிது குறைந்த வீதாச்சாரம் கொடுக்கக் கூடியதாயிருக்கலாம். நாம் அருமையாகக் கொடுக்கக் கூடியதைக் கொடுக்க வேண்டும். நாம் சிறிதும் அருமையாகக் கொள்ளாத ஒன்றை கொடுக்கலாகாது, ஆகவே ஒழுங்காயும், இரகசியமாயும் இடது கை அறியாதிருக்க கொடுப்பது சிறந்த முறை.

காணிக்கையையும், காணிக்கை சம்பந்தமாயுள்ளதையும் திருச் சபை எவ்வளவு பக்தி வினமாய்ப் பாராட்டுகிறது.

1. சபையாரால் இதற்கென்று சவதரித்த யோக்கியமான பாத்திரத்தில் வாங்கவேண்டும். காணிக்கைப்பை, காணிக்கைத்தட்டு உபயோகிக்கப்படுவது வழக்கம். அவைகள் கூடியமட்டும் சுத்தமாயும் நேர்த்தியாயும் இருக்கவேண்டும். வீடுகளில் உபயோகிக்கக் கூடியவைகளை உபயோகிப்பது தகுதியல்ல.

2. உதவிக் குருக்களாவது, கோவில் காரியகாரராவது இந்தக் காரியத்துக்கென்று நியமிக்கப்பட்ட மற்றவர்களாவது, காணிக்கை வாங்க வேண்டும். ஆதித் திருச்சபையில் உதவிக் குருமார் நியமிக்கப்பட்டது தரும காரியங்களை ஒழுங்கு படுத்தவே. தற்சமயம் உதவிக் குருமார் ஆராதனையில் உதவிபுரியும்படியாக அமைந்து விடுவதால் மற்றும் பேர் காணிக்கை வாங்குகிறார்கள். சில சபைகளில் யாவரும், சிறுவரும் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள். சிலர் காணிக்கை எடுக்கும்படி நேர்ந்திருக்கிறதாகத் தெரிவிக்கிறார்கள். இவைகள் திருச் சபையின் போக்குக்கு ஏற்றவைகள் அல்ல. இக்காரியத்துக் கென்று நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தோர்ணக்கல் ஆலயத்தில் ஏற்ற இடங்களில் நல்ல செம்புகள் நேர்த்தியான ஸ்தம்பங்களில் வைத்திருக்க, ஆலயத்தில் பிரவேசிக்கும் போது பலரும் அவைகளில் காணிக்கை போட்டு வருவது இந்தியர் மனதிற்கு ஏற்றதே. கோவில் காரியக்காரர் அவைகளைக் குறித்த சமயத்தில் குருவானவரிடம் கொண்டு போகிறார்கள். மேலும் அரிசி காணிக்கையையும் ஆலயத்தில் படைக்கப்படுமாறு குருவானவரிடம் இச்சமயம் கொஞ்சம் கொண்டுவருவது தகுதி.

3. குருவானவரிடத்தில் வணக்கமாய்க் கொண்டுபோக வேண்டும். அவர் அதை ஏற்றுக்கொண்டு தாழ்மையாய்ப் படைத்து திருமேசையின் மேல் வைக்கவேண்டும். தாழ்மையாய்ப் படைக்கும் நோக்கம் சில குருக்கள் முழங்காலில் நின்றே காணிக்கையைத் திருமேசையில் படைப்பார்கள். குருவானவர் காணிக்கையை ஜெபத்தோடு படைக்கிறார். சில ஆலயங்களில் குருவானவர் படைக்கும்போது ஒரு ஜெபம் சொல்லச் சபையார் யாவரும் அந்த ஜெபத்தில் சேர்ந்துகொண்டு 'ஆமென்' என்று சொல்லுகிறார்கள். திருமேசையில் வைத்துவிடுவது போதுமென சிலர் நினைக்க, பொதுவாய்க் காணிக்கைகளை மேலே ஏறெடுக்கும் வழக்கம் சாதாரணம்.

'மற்றக் காணிக்கை' என்பது பொருள் காணிக்கை, ஸ்தோத்திர காணிக்கையைக் குறிக்கலாம். அடுத்த ரூபிரிக்கில் விபரமாய்ச் சொல்லப்பட்டுள்ள அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் குறிக்கிறதாக அபிப்பிராயப்படுவார் சிலர். அதற்கிசையப் பின் வரும் ஜெபத்தில் 'தருமங்களையும் காணிக்கைகளையும்' என்று வழங்கப்படுவதில், ஏழைகளுக்காகத் தருமங்களையும், பரி. நற்கருணைக்கான அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் குறிக்கிறதென்பது எண்ணம். பரி. நற்கருணை ஆராதனையின் காணிக்கை ஏழைக்கானதும், தருமமாகச் செலவிடப்பட வேண்டுமென்பதும் பக்தி முறையே.

அப்பமும் திராட்ச ரசமும் காணிக்கைகளோடு கோவில் காரியகாரர் இச்சமயத்தில் திரு மேசையண்டை கொண்டுவருவது ஆதி காலத்து வழக்கமே.

நமது சபை காணிக்கையைப்பற்றி இவ்வளவு பயபக்தி பாராட்டி நிற்க, பல சபைகளில் அவைகளை ஊர்ப் பொக்கிஷமாகப் பாவித்து, தகாத விஷயங்களுக்கும் அதைச் சம்பந்தப்படுத்தி அதனால் சபைகளிலும் பல தாறுமாறுகள் விளைவது எவ்வளவு தகாத காரியம்.

பரி. நற்கருணை பரிமாறாவிட்டாலும் காணிக்கை இருக்கவேண்டுமென்பது ஒழுங்கு. போதுமான அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் குருவானவர் எடுத்துக்கொள்ளவும், மிகுதியானதை வைத்துவைக்கவும், ஒருவேளை இரண்டாம் முறை பிரதிஷ்டை செய்வதை உத்தேசித்தும், திருமேசைப் பக்கமாய் வசதியான இடத்தில் ஒரு சிறு மேசை அமைத்து அதில் அப்பம் திராட்ச ரசம், தண்ணீர் முதலியவைகளை வைத்திருக்கும் வழக்கம் உண்டு. சில ஆலயங்களில் சுவரிலேயே அதற்கு ஏற்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திருச்சபைக்காகச் செய்யப்படும் ஜெபம்

அன்பின் கிரியைகளில் காணிக்கை, தருமம் மட்டுமல்ல, நமது ஜெபங்களும் விசேஷமானதே. எல்லாருக்காகவும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டும் என்பது ஆண்டவரு

டைய கட்டளை. ஜெபத்தைவிட நாம் மற்றும் பேர்களுக்குச் செய்யக் கூடிய பெரிய நன்மை இல்லை. தன்னயமற்றவர்களாயிருக்க வழி மற்ற வர்களுக்காக ஜெபிப்பதே. 'எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங் களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்' என்பது பரி. பவுல் அப்போஸ்தலன் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்திமதி. (1 தீமோ. 2: 1). இதை ஆதாரமாகக்கொண்டு இவ்வுலகத்தில் போராடும் கிறிஸ்து சபைக்கான ஜெபம் உபயோகிக்கப் படுகிறது. இது பொதுவான ஜெபம் என்று அழைக்கப்படுகிறது. இது 1549-ம் வருஷத்தில் பிரதிஷ்டை ஜெபத்தோடே ஒரே ஜெபமாக அமைந்திருந்தது. மேலும் மரித்துப்போன பக்தர்களை வெகுவாய்ப் பாராட்டி பரி. கன்னிமரியம்மாள், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், ரத்தச் சாட்சிகள் முதலியவர்களைக் குறிப்பிட்டிருந்தது. உத்தரிக்கும் ஸ்தலத் தைக் குறித்தும் அர்ச்சியசிஷ்டருக்காக வேண்டிக் கொள்ளுகிறதைக் குறித்தும் ரோம சபை உபதேசித்து வந்த வீண் காரியங்களினிமித் தம் மரித்தவர்களுக்காக ஏறெடுக்கும் ஜெபங்களையும் குறைத்து விடுமாறு முழுவதும் நிறுத்தப்பட்டது. 1662-ம் வருஷத்தில் தற்சமயம் இருக்கிற படியானது.

போராடுகிற. இவ்வுலகத்திலுள்ள சபை போராடுகிற சபையே. ஆகையால் 'இவ்வுலகத்தில்' என்னும் பதம் அவசியமில்லை யென்று அமெரிக்கா தேசத்துச் சபையின் ஜெப புஸ்தகத்தில் எடுத்துவிடப்பட் டது. போராடும் சபை, எதிர் நோக்கும் சபை, வெற்றி சிறந்த சபை எனத் திருச்சபை மூன்று வகைப்படும். சீருண்டாக. சற்று தப்பிதமான மொழி பெயர்ப்பாகக் கருதப்படுகிறது. இங்கிலிஷில் 'அனைத்துக்கும்' என்று சொல்லப்படுகிற வார்த்தையை இவ்வாறு அர்த்தப்படுத்தலாம். தமிழில் 'அனைத்துக்கும்' என்றும் 'சீருண்டாக' என்றும் திருப்பியிருக்கிறது. 'சீருண்டாக' என்பது சீர் கேட்டைக் குறிக்கிறதாயிருந்தாலும், நற்சீர் அடையவேண்டுமென்பதையும் கருதலாம்.

இந்த ஜெபத்தில் 1. நமக்காக. (1) நாம் செலுத்துகிற தருமங் களையும், காணிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவும். நீ அற்பமாய் எண்ணு கிறதைத் தேவன் ஏற்றுக் கொள்ளக் கேட்கிறது எப்படி? (2) நாம் செய்கிற ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளவும்.

2. எங்குமுள்ள (கத்தோலிக்) திருச்சபையில் (1) உண்மையும் ஒற்றுமையும், சமாதானமும் காணப்படுவதற்காக (உண்மை=சத்தியம் ஐக்கியம்=ஒரு மனசு; ஏக சிந்தை=ஒரே இருதயம்)

2. சபைக்கு அருளப்படுவதே தனிக் கிறிஸ்தவர்களில் விளங்க வேண்டும். கிறிஸ்தவர்கள் ஐக்கியத்திலும், தேவ பக்தியுள்ள அன்பிலும் வாழ்வது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைப் பொறுத்தது.

3. இராஜாவுக்காகவும். அதிகாரிகள் யாவருக்காகவும், (1) தேவ பக்தியோடும், சமாதானத்தோடும் ஆளுமாறு அவர்களை (துன்பத்தில்)

இரட்சித்து (துன்பத்தினின்று) காப்பாற்றவேண்டும். (2) அதிகாரிகள் நீதியைச் செலுத்தி, துன்மார்க்கத்தைத் தண்டித்து, சத்திய வேதத்தையும், சன் மார்க்கத்தையும், நிலைப்படுத்த வேண்டியவர்கள். சத்திய வேதம் சன் மார்க்கத்திற்கு ஆதாரம். 'அவன் பட்டயத்தை விருதாவாய் பிடித்திருக்கவில்லை'. ரோ. 13: 4.

4. **அத்தியக்ஷர்மார், குருமார்.** அவர்களது பணிவிடை இருவகையானது:— (1) தேவ வசனத்தைப் பிரசித்தப்படுத்துவதும் (2) பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஒழுங்காயும் கிரமமாயும் கொடுப்பதும். இவைகளுக்குத் தேவ கிருபை அவசியம். யாவரும் ஜெபிக்கவேண்டும். (ஒழுங்காயும் சரியாயும், ஏற்ற விதமாயும்; கிறிஸ்துவின் நியமத்திற்கும், திருச்சபையின் சட்டத்திற்கும் ஏற்க; செம்மையாயும்—ஏற்றகாலங்களிலும்).

5. **தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்காகவும் விசேஷமாய் வந்திருக்கும் சபையாருக்காகவும்,** (கேட்டு உட்கொண்டு) சிலர் முந்தின விண்ணபத்தோடு சம்பந்தப்படுத்தி, தேவ வசனத்தைக் கேட்டு சாக்கிரமந்தை உட்கொண்டு என்று குறிப்பதாகக் கூறுவார்கள். பரிசுத்தமும் நீதியும்—தேவன் விஷயத்தில் பரிசுத்தமும் மற்றவர்கள் விஷயத்தில் நீதியும் உள்ளவர்களாய் ஊழியஞ் செய்யவேண்டும். பரிசுத்தம் உள்ளான இருதயத்தையும், நீதி தேவன் அருளிய நியாயப் பிரமாணத்தையும் பொறுத்தது. இவ்வித ஜீவியத்திற்குப் பரிசுத்த வேதாகமமே ஆதாரம். (இந்த ஜெபத்தில் தேவனுடைய பரிசுத்த வசனம் அதிகமாய்ப் பாராட்டப்பட்டிருக்கிறது.)

6. **துன்பப்படுவோருக்காக.** துன்பம், துக்கம் உள்ளவர்களைத் தேற்றி, வறுமை, வியாதி, மற்றும் உபத்திரவங்களால் வருத்தப்படுகிறவர்களை ஆதரிக்கவேண்டும்.

7. **கர்த்தருக்குள் மரித்துப் போனவர்களுக்காக** கடவுளைத் துதித்து, அவர்களது நல் மாதிரியைப் பின்பற்றி அவர்களோடு பரம ராஜ்யத்தில் பங்கு பெற தேவ கிருபைக்காக ஜெபிக்கிறோம். 'உம்முடைய நாமத்தைப்பற்றும் மெய் விசுவாசமுள்ளவர்களாய் மரித்த அனைவரோடுங்கூட நாங்களும் என்றுமுள்ள உமது நித்திய மகிமையிலே சரீரத்திலும், ஆத்துமத்திலும், குறைவின்றிச் சம்பூரணம் அடைந்தவர்களாய் ஆநந்தத்தை அனுபவிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்'. (அடக்க ஆராதனை)

பரி. நற்கருணை பரிமாறு திருக்குமானல் ஆராதனைக்கு முடிவிலுள்ள ஆறு சுருக்க ஜெபங்களில் இரண்டொரு ஜெபத்தையும் ஆசீர்வாதத்தையும் வாசித்து முடிக்கவேண்டும். அப்படி நேரிடுமானல் ஆசீர்வாத ஜெபத்தின் பின் பாதியை மாத்திரம் சொல்லுவது போதுமானது என்று நினைப்பது ஒழுங்கல்ல.

பரி. நற்கருணை பரிமாறினல், இச்சமயத்தில் ஞானஸ்நானம் பெருதவர்கள், சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்கள் வெளியேறி விடுகிற

வழக்கம் இருந்தது. அவர்களோடு பரி. நற்கருணைப் பந்தியில் சேராதவர்களும் போய்விடுகிற வழக்கம் சில ஆலயங்களில் உண்டாகி இருந்து வருகிறது. இவர்கள் போகவேண்டுமென்று ஜெப புஸ்தகத்தில் கட்டளையில்லை. பரி. நற்கருணை ஆராதனை திருச்சபையின் பொதுவான ஆராதனை. பக்தியுள்ளவர்கள் திருப்பந்தியில் யாவரும் சேர்ந்து ஆராதிக்க வேண்டியதே. சேருவதற்குத் தடைகள் இருந்தால், அவர்கள் பக்தி விநயமாய் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கலாம். பிள்ளைகள் பரி. நற்கருணைக்காரராவதற்கு ஆயத்தமாக அவர்களும் சில வேளைகளில் ஆராதனை முடியுமட்டும் தங்கியிருப்பது நலம்.

V. ஆராதனை முறைமை — பரி. நற்கருணை

அழைப்பு. பரி. நற்கருணை பந்தியில் சேருகிறவர்கள் கிராதியின் பக்கமாய் வசதியாய் வந்து அமரும்படியான அழைப்பு அடங்கிய சிறு புத்திமதி 1548-ம் வருடத்து ஆராதனையிலிருந்து, பரி. நற்கருணை ஆசரிக்கும் நேரத்தில் வாசிக்கவேண்டிய பிரசங்கத்தில் (மூன்றாவது) அபாத்திரமாய்ச் சாக்கிரமெந்தை வாங்கினால் வரும் பெரும் மோசத்தையும் குற்றத்தையும் உத்தேசித்துச் சற்று மலைகிறவர்களை ஆறுதல் படுத்தி ஆயத்தப்படுத்த இந்தப் புத்திமதி ஏற்றதே.

பரி. நற்கருணைப் பந்தியில் சேருகிறவர்கள் ஒருவாறு ஏற்ற விதமாய் ஆயத்தப்பட்டிருக்கிறார்கள். உண்மையான மனஸ்தாபம், பிறரிடம் அன்பும் சிநேகமும், புது ஜீவியத்தைப்பற்றிய தீர்மானமுமுள்ளவர்களாய் ஒப்புக்கொள்ளப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் விசுவாசம் தேவை. கிறிஸ்துவின் இரக்கத்தையும் அன்பையும் விசுவாசிக்க வேண்டும்.

மேலும் இந்த இடத்தில் அன்பின் முத்தம் வழங்கப்பட்டு வந்தது. சில ஒழுங்கீனங்களினிமித்தம் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் முத்தஞ்செய்து வந்தார்கள். பின்னால் அதுவும் நின்று விட்டது. என்றாலும் சில சபைகளில் அது வழங்கப்பட்டு வருகிறது. அதை அனுசரித்து, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து என்னும் வாசகம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

பணிவாய் மூழங்காலிட்டு — நமது ஆலயங்களில் முன்னதாகவே முழங்காலில் நிற்கிறார்கள். ஒரு வேளை (மூன்றும்) பிரசங்கத்தினிமித்தமோ, கிராதியின் பக்கமாய் வரும்படி எழுந்ததின் நிமித்தமோ பணிவாய் முழங்காற்படியிடச் சொல்லப்படுகிறது. ஒரு வேளை பாவ அறிக்கையை உத்தேசித்து முழங்காலில் நிற்கும் ஜனங்கள் பணிவாய் முழங்கால் படியிட்டுப் பாவ அறிக்கை செய்ய விரும்பலாம். பாவ அறிக்கைசெய்யும்போது ஜனங்கள் பணிவாய் முழங்காற் படியிட்டிராமல் முழங்காலில் சாவதானமாய்ப் படுத்திருப்பது சரியன்று. அப்படிப் படுத்

திருப்பதைப் பார்ப்பது 'ஆரிய சூரிய வணக்கம்' போன்றது. எப்படியும் பாவ அறிக்கை பாவ விமோசனம், பிரதிஷ்டை ஜெபம், ஆசீர்வாதம் இவைகளுக்கு யாவரும் பணிவாய் முழங்காற்படி யிட்டிருக்க வேண்டும்.

பின்பு பாவ அறிக்கை வருகிறது. அதற்குரிய ரூபிரிக் தெளிவற்றது. பூர்வீக சபையில் குருவானவரும் சபையாரும், தங்கள் தங்கள் பாவங்களை தங்களுக்குள்ளே அறிக்கை இட்டார்கள். 1548-ம் வருடத்தில் பரி. நற்கருணை பெறவேண்டுமென்றிருக்கிற அனைவருடைய நாமத்தினாலும் அவர்களில் ஒருவராவது, ஆராதனை நடத்துகிறவர்களில் ஒருவராவது, குருவானவராவது பொதுவான பாவ அறிக்கை சொல்ல வேண்டுமென்றிருந்தது. அவ்வாறு சபையாரில் ஒருவராவது பொதுவான ஆராதனையில் சொல்லுவதை ஆட்சேபித்து 1662-ம் வருடம் அது நீக்கப்பட்டு ஜனங்களெல்லாரும் சொல்லும் ஒழுங்கானது. மேலும் இந்தப் பாவ அறிக்கை மிகவும் பொதுவானது. எவ்வளவேனும் திட்டமானதல்லவென்றும் ஜென்ம பாவத்தைப்பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லையென்றும் சிலர் ஆட்சேபித்தார்கள். ஜென்மப்பாவம் பரிசுத்த ஞானஸ்நானத்தில் கழுவப்பட்டு விட்டது என்று சமாதானம் கூறப்பட்டது. இது பொதுவான ஆராதனையின் பாவ அறிக்கையே. இதுவே சமுத்திரத்தில் துன்ப வேளையில் உபயோகிக்கும் ஆராதனையில் வழங்கப்படுகிறது. பிந்தின ரூபிரிக்கில் 'குருவானவர் எழுந்து நின்று' என்று குறிப்பிட்டிருப்பதால் பாவ அறிக்கை வேளையில் அவரும் முழங்காற்படியிட்டிருக்க வேண்டும். இன்னும் இந்த ஆராதனையில் பந்தி சேரும் விண்ணப்பமும் குருவானவர் முழங்காற்படியிட்டுச் செய்ய வேண்டியது. முக்கியமாய்க் குருவானவர் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இந்த ஆராதனையை ஏறெடுப்பதாலும், ஆராதனையின் போங்கு வசதிக்கு ஏதுவாகவும், குருவானவர் நிற்க வேண்டியதாகவே இருக்கிறது.

காலை மாலை ஆராதனைகளில் பொதுவான பாவ அறிக்கையோடு ஒப்பிட்டால், இது அவ்வளவாய்ப் பாவத்தின் பல தன்மையைக் குறிப்பிடவில்லை, மேலும் பாவ அறிக்கை, மன்னிப்புக்காகவும் கிருபைக்காகவும் ஜெபங்கள் என தெளிவான பாகங்களாக இதைப் பிரிக்கவும் முடியாது. என்றாலும் இது ஊக்கமானது. பாவத்தின் பயனான துக்கம், புலம்பல், வேதனை, பாரம், முதலியவைகளைக் குறிப்பிடுகிறது. பாவ அறிக்கை உணர்வோடு சொல்லப்படவேண்டும். பாவ அறிக்கை ஜெபத்தை நிறுத்திச் சொல்லுவதும், சொன்ன பின் சற்று நேரம் அமைதியாயிருப்பதும் நன்று. உக்கிரகோபாக்கினை பாவியைப் பொருத்தது. பாவிக்குத்தேவனைப் பற்றிய பயம் சத்திய வேதத்தின் போதனைக்கு ஏற்றது.

பாவ விமோசனம். பாவத்தை அறிக்கையிட, பாவமன்னிப்புக் கூறப்படுகிறது. 'நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; — தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்' சங். 32: 5. பாவங்களை மன்னிக்கிறது தேவன் ஒருவ

ருக்கே உரியது. அந்த அதிகாரம் திருச்சபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, திருச்சபை குருமார் மூலமாய் அதை வழங்குகிறது. பாவமன்னிப்பைக் கூறுவது குருவானவர்க்குப் பட்டம் பெறுஞ் சமயத்தில் சபை அளிக்கும் ஓர் அதிகாரம். அத்தியட்சர் ஆராதனைக்குரிய உடுப்பு அணிந்திருப்பாரானல் அவரே பாவ விமோசனங்கூறவேண்டும். பாவவிமோசனத்தைப் போலவே ஆசீர்வாதமும் விசேஷமானதே. எழுந்து நின்று — அதிகாரத்தோடு கிறிஸ்துவின் பிரதிநிதியாய் ஜனங்கள் முகமாய்த் திரும்பிக் கூறுகிறார். (முன்னால் வேறு விதமாய் இருந்திருக்கவேண்டும்.)

கிறிஸ்துவினிமித்தம் தேவனால் பாவ மன்னிப்பு மனஸ்தாபமும் விசுவாசமுள்ளவர்களுக்கு அருளப்படுகிறது. தேவன் இரக்கமாய்ப் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அதன் வல்லமையினின்று விடுதலையாக்கி, சகல நன்மையிலும் நிலைநிற்கக் கிருபையும், நித்திய ஜீவனும், பாவ விமோசனத்தின் பயனும். தேவன் பாவங்களையெல்லாம் மன்னித்த பின் நம்மைக் குற்றப்படுத்துகிறது யார்? பாவ மன்னிப்பின் சந்தோஷம் எம்மட்டும்!

இந்தப் பாவ விமோசனம் ஆசீர்வாதப் போங்கானது. காலை மாலை ஆராதனைகளில் கூறப்படுவது வெறும் அறிவிப்பே. வியாதியஸ்தனைச் சந்திக்கும் முறையிலுள்ளதோ, தனி ஆளுக்கானதால், அதிகாரப் போங்காய் எவ்வித நிபந்தனையற்றதாய் வழங்கப்பட்டுள்ளது.

பாவ மன்னிப்பின் நிச்சயத்தை உறுதிப்படுத்த ஆறுதலான வார்த்தைகள் மிகவும் உபயோகமானவை. இவைகள் பாவ அறிக்கைக்கும் விமோசனத்திற்கும் இடையில் வருவது ஏற்றதென்று நினைப்பாருமுண்டு. நாலு வசனங்கள் (1) 'அழைக்கிறார்' — இளைப்பாறுதல். (2) 'அன்பு கூறுகிறார்' — நித்தியஜீவன். (3) 'வந்தார்' — இரட்சிப்பு. (4) 'பரிந்து பேசுகிறார்' — கிருபாதார பலி. கிருபாதாரபலி தேவன் தமது கிருபையை அருளுவதற்கு ஆதாரமாக அவரது நீதியைத் திருப்தி செய்வதற்கு ஏதுவான பலி தேவனையும் பாவியையும் ஏற்றவாறு ஒப்புரவாக்குதல்.

ஸ்தோத்திரம். பாவமன்னிப்பு உறுதியாக, பாவப் பாரம் நீங்க, நாம் நமது இருதயத்தை உயர்த்துகிறோம். நமது இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்த நம்மில் துதிதோத்திர சிந்தை உண்டாகிறது. தேவனுக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். காலை மாலை ஆராதனையிலும் பாவமன்னிப்பு அருளப்பட நாம் கடவுளை ஏற்றவாறு துதிக்கிறோம். நாம் எக்காலத்திலும் எவ்விடத்திலும் (பிலிப். 4: 4-7) தேவனுக்குத் தோத்திரம் செலுத்துவது தகுதியும் நீதியும் விசேஷித்த கடமையுமாயிருக்கிறது, தேவ தூதர்களும் பரம சபையுமே. அவர்களோடு பாவிகளாகிய நாம் இப்பூலோகத்தில் தேவனைத் துதிக்கிறது விசேஷமே. நாம் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபையனைத்தோடும் சேர்ந்து தேவனைத் துதிக்கிறோம். (தூதரும் பிர

தான தூதரும் தேவ தூதர்களின் பல வகுப்புகள்; ஒன்பது வகுப்புகள் உண்டென்று சொல்லிக்கொள்ளுவார்கள்) இது தேவ தூதரின் ஆராதனை. நாம் அவர்களோடு சேர்ந்து கொள்ளுகிறோம். தேவ தூதர்களுக்கும் போராடும் சபையாகிய நமக்குமுள்ள அன்னியோன்னியம் பாராட்டத்தக்கதே. பரி. நற்கருணை ஆராதனையில் தேவ தூதர்கள் நம்மோடு ஆராதிக்கிறார்கள், பங்கெடுக்கிறார்கள் என்பது ஆதிக் கிறிஸ்தவர்களின் பக்தியான அனுபவம். தேவ தூதர்களின் பாட்டை (எசா. 6: 3) நாமும் அவர்களோடு பாடுகிறோம். பின்னால் 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்', என்னும் தூதர்களின் பாட்டையும் நாம் அவர்களோடு சேர்ந்து பாடுகிறோம். 'பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' தேவனுடைய பரிசுத்தத்தை வற்புறுத்துமாறு பாடப்பட்டதானாலும், திரித்துவத்தைப்பற்றிக் குறிப்பு அடங்கியுள்ளதாக நாம் அறிகிறோம்.

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள் என்பதிலிருந்து பிரதிஷ்டை பரி. நற்கருணை பெறுதல் வரை ஒரே பாகம். இதுவே ஆராதனையின் விசேட பாகம். துதிதோத்திரப் பலி ஆராதனைக்கு இதுவே ஆரம்பம், முகவுரை. இது பல ஆதிச் சபை ஆராதனை முறைமைகளில் காணப்படுகிறதினால் அப்போஸ்தலர் காலத்திலுள்ளதாயிருக்கவேண்டுமென்பது அபிப்பிராயம். ஆராதனையின் விசேஷ நோக்கத்தைக் குறித்து விசேட முகவுரைகள் அமைந்துள்ளது. விசேஷ நோகத்துடன் பரி. நற்கருணை ஆசரிப்பது தகுதியே. சில ஆலயங்களில் வியாதியஸ்தர்களுக்காக விசேஷித்த நோக்கத்தோடு ஆராதனை ஏறெடுக்கப்படுகிறது. கிறிஸ்தவ குடும்ப ஜீவிய விஷயமாய், விவாகம், பிறந்த நாள் முதலிய விசேடங்களினிமித்தம் விசேட நோக்கத்தோடு பரி. நற்கருணை ஆசரிக்கப்பட நினைக்கலாம்.

சில சபையின் ஆராதனையில் விசேஷ முகவுரையில்லாமலும், சிலதில் வருடத்தின் ஒவ்வொரு வாரமும் வெவ்வேறான முகவுரைகள் வாசிக்கப்படுகிறதாயிருந்தாலும் நமது சபையோ பத்து விசேட முகவுரைகளை அமைத்திருக்கிறது. திருநாட்கள் திருவியாழன் திரித்துவ ஞாயிறு இவைகளுக்குரியது. அந்தந்த நாளில் மட்டும் உபயோகிக்கப்படும். கிறிஸ்மஸ், பிரசன்னம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், பரிசுத்த ஆவியின் பண்டிகை இவைகளுக்குரியது. பின்வரும் ஏழு நாட்களுக்கும் உபயோகிக்கப்படவேண்டியது. (பரிசுத்த ஆவியின் பண்டிகைக்கு அடுத்த ஏழாம் நாள் திரித்துவ ஞாயிறாய் இருந்து அந்த நாளுக்கு விசேஷ முகவுரை இருப்பதால் ஆறு நாட்கள் தான் குறிக்கப்பட்டிருக்கிறது). இதைக் கவனிக்க. பரி. நற்கருணை வாரநாட்களிலும், ஒழுங்காய் ஆசரிக்கப்படலா மென்பது திருச்சபையின் நோக்கம். மேலும் விசேஷ பண்டிகையின் ஆசரிப்பு ஏழு நாட்கள் இருக்கவும்.

1. கிறிஸ்மஸ் பண்டிகை. கிறிஸ்துவானவருடைய பிறப்பின் விசேஷமும் பிறப்பின் நோக்கமும், பரி. கன்னிமரியம்மாளது இரு திருநாட்களுக்கும் இதுவே முகவுரை.

2. பிரசன்னத் திருநாள். கிறிஸ்துவானவர் மாம்ச தன்மையைத் தரித்தவராய் ஜீவித்த கால முழுவதிலும், தேவனை மகிமைப் படுத்தினதைக் கொண்டாடுகிறோம். (சாஸ்திரிகளுக்கு மட்டுமல்ல, அது சொல்லிக் கொள்ளப் படவில்லை.)

3. திரு வியாழன். பரி. நற்கருணை நியமித்ததற்காக, அதன் நோக்கம் — அவரது அன்பினால், நாம் அவரது தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறும் பொருட்டு.

4. பரி. கன்னிமரியம்மாள் (சுத்திகரிப்பு, மங்களவாக்கு) கிறிஸ்மஸ் பண்டிகைக்குரியது.

5. உயிர்த்தெழுந்த பண்டிகை. அவர் மகிமையோடு உயிர்த்தெழுந்ததினிமித்தம், அதனால் நித்ய ஜீவன் நமக்கு அருளப்பட்டதினிமித்தமும்.

6. பரமேறுதல். உயிர்த்த கிறிஸ்து தரிசனையினால் பக்தர்களை ஆவிக்குரிய அன்னியோன்னியத்தில் பரீட்சித்து, பரமண்டலத்திலும், நம்மில் அனுதாபமுள்ளவராகவே நாம் அவரோடு கூட ஆளுகை செய்ய நமக்கு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதற்காக.

7. பரிசுத்த ஆவியின் திருநாள். இரண்டிலொன்றை வாசிக்கவும். முதலாவதில் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திலுள்ள சம்பவங்களை சற்று நுட்பமாய்ச் சொல்லியிருக்கிறது; இரண்டாவதானதோ பொதுவானது. பரிசுத்த ஆவியோடு சுவிசேஷ ஊழியத்தைச் சம்பந்தப்படுத்தியிருக்கிறது. (இருளுக்கும் மருளுக்கும் அந்தகாரத்திற்கும் மருள விழுகிறதற்கும்.)

8. கிறிஸ்துவின் மறுரூபம். கிறிஸ்துவின் தெய்வீகத்திற்குச் சாட்சியாக அவரது மறுரூபமும் அசரீரி வாக்கும்.

9. பரிசுத்தவான்களின் திருநாள். (எபி. 12: 1) கிறிஸ்தவ ஜீவியம் — பந்தய ஓட்டம். பந்தய ஓட்டத்தைப் பார்க்கக் கூடியிருக்கும் போதுமானபேர் (சாட்சிகள்) உண்டு. அவர்கள் ஆட்களானமட்டும் போந்த அனுதாப முள்ளவர்களே.

10. திரித்துவ திருநாள். திரித்துவ உபதேசத்தைக் கூறுகிறது. 'பரிசுத்த பிதாவே' என்பது திரித்துவத்தில் ஒருவராகிய தேவனாகிய பிதாவை மட்டும், திட்டமாய்க் குறிப்பிடுவதால் திரித்துவ ஞாயிறில் விடப்படும்.

தூதர்களின் பாட்டு. பாட்டானமட்டும் பாடப்படவேண்டும். பாடாவிட்டால் சொல்லவேண்டும். பாடவேண்டியதாயிருப்பதால் பாட்டுக்கு முன்னுள்ளவைகளைக் குருவானவர் வாசிக்க, பாட்டைமட்டும் யாவரும் பாடுகிறார்கள். சிலர் 'ஆதலால் தூதரோடும் —' என்பதிலிருந்து குருவானவரோடு சேர்ந்து சொல்லுகிறார்கள்.

பிரதிஷ்டையை உத்தேசித்து (பிரதிஷ்டை செய்கிறவர் கிறிஸ்து தாமே; அவரது வார்த்தைகளே கேட்கிறது) இச்சமயத்தில் 'ஓசன்னு கர்த்தரின் நாமத்தினுலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னு' என்னும் கீதத்தை சில இடங்களில் பாடுவார்கள்.

பந்தி சேரும் விண்ணப்பம். பாவ அறிக்கை ஜெபத்தைப்போல பரி. நற்கருணை வாங்கப்போகிற எல்லாருடைய நாமத்தினுலும் குருவானவர் முழங்காற்படியிட்டுச் சொல்லுகிறுர். ஆரம்பத்தில் பிரதிஷ்டைக்குப் பின் பரி. நற்கருணை வாங்குமுன் சொல்லப்பட்டது. குருவும் சபையும் கர்த்தருடைய பந்தியைக் கிட்டிச் சேர்ந்து ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண தேவ கிருபைக்காக ஜெபம். 1552-ம் வருடத்தில் பிரதிஷ்டைக்கு முன் இந்த இடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தேவனுடைய இரக்கத்தையே ஆதாரமாகக்கொண்டு இந்த ஜெபத்தையே ஏறெடுக்கிறோம். நமது அபாத்திரத் தன்மையை அறிக்கையிட்டு (பரி. மத் 15: 27) நாம் ஏற்ற விதமாய்ப் பெற (நாம் சுத்தமாகக் கழுவப்படவும் நாம் அவருக்குள்ளும் அவர் நமக்குள்ளும் வாசமாயிருக்கவும்) ஜெபிக்கிறோம். ரோமானித்தர் ரசத்தை ஜனங்களுக்கு விலக்கினதைக் கண்டிக்குமாறு ரத்தத்தைத் தனிமையாகவும் பாராட்டியும் கூறியிருக்கிறது.

விலை யுயர்ந்த ரத்தம். பலனினிமித்தம் விலை யுயர்ந்ததாகமட்டுமல்ல, கிறிஸ்துவின் அகோரப் பாடுகளினிமித்தமும் விலையுர்ந்ததே.

பிரதிஷ்டை ஜெபம்

விசேஷமானதே. குருவானவர் நின்று சொல்லவேண்டியது. அவர் பிரதிஷ்டை வேளையில் அப்பத்தைப் பிட்கவும் பாத்திரத்தை எடுக்கவும் எவ்விதத் தடையில்லாமல் வசதியாயிருக்குமாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். தடையேற்படுவது பக்தி விநயத்திற்கு இடைஞ்சலே. ஜனங்களுக்கு முன்பாக: இரகசியமாய் மந்திரமாய் அல்ல, ஜனங்கள் காணத்தக்கதாக ஜனங்கள் திருமேசையையும், குருவானவரையும் காணத்தக்கதான இடத்தில் அவர் நிற்கிறது பரி. நற்கருணை ஆராதனை ஏற்றவாறு ஆசரிக்க உதவியாயிருக்கும். காது மட்டுமல்ல கண்களும் தியானத்திற்கேற்ற விஷயங்களை நோக்கலாம். குருவானவர் பிரதிஷ்டை வேளையில் செய்யும் சிறு விஷயங்களும் பக்திக்குரியவைகளே.

பிரதிஷ்டை ஜெபம் முந்தி அதிக நீளமாயிருந்தது. அந்நீண்ட ஜெபத்தின் முதற்பாகம் போராடும் சபைக்காகச் செய்யும் ஜெபமாகவும், கடைசிப் பாகம் ஸ்தோத்திர ஜெபமாகவும் (ஆத்ம சரீர அர்ச்சனை ஜெபம்) பிரித்து இடமாற்றி வைக்கப்பட்டது. இது வெகு அருமையானது, மனப்பாடஞ்செய்ய வேண்டியதே. சத்திய வேதத்திற்கு விரோதமான ஒரு வார்த்தையாவது இல்லை. ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமானது.

(a) கிறிஸ்து சிலுவையில் தம்மைத்தாமே ஏக பலியாக ஒப்புக் கொடுத்துச் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமும் போன்றதுமான பலியாகவும், காணிக்கையாகவும் பரிகாரமாயுமிருக்கிறதென்றும் பரி. நற்கருணை கிறிஸ்துவின் மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகமுமான நியமுகமென்றும்,

(b) கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூர்ந்து அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் மெய் விசுவாசத்தோடு வாங்கும் போது அவருடைய பரிசுத்த சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ள வர்களாகிறோமென்றும், திட்டமாய்க் காட்டுகிறது.

(c) பின் பங்கு மகா விசேஷமானது, பிரதிஷ்டையே; இது பரி. நற்கருணை பிரதிஷ்டைக்கென்று பரிசுத்த பவுல் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டது (1 கொரி. 11: 23-25)

சிலுவையிலே ஒரே தரம். திரு மேசையில் திரும்பத் திரும்ப பலி யிடப்படுகிறார் என்கிற விகற்பமான உபதேசத்தைப் பலமாய்க் கண்டிக் கிறது (எபி. 10. 10: 14). பழைய ஏற்பாட்டுப் பலிகள் திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்டிருக்க, கிறிஸ்துவானவரது பலியோ அப்படி யல்ல, அப்படிக்கு அவசியமுமில்லை. நிறைவும் பூரணமும் போன்றதுமான பலியையும், காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தியிருக்கிறார். இது நிறைவான பலியையும் பூரணமான காணிக்கையையும் போன்றது மான பரிகாரத்தையும் செலுத்தியிருக்கிறார் என்பதே இதன் விஷயம்.

1. **நிறைவான பலி.** மனுஷரைப் பொருத்தது. மனுஷன் நிலைமைக்கும் அவசியத்திற்கும் ஏற்றது. மனுஷன் பாவியாய் நிர்ப்பந் தனாய் ஒன்றும் செய்யக்கூடாத நிலைமையில் மனிதனுக்காகக் கிறிஸ்து தம்மையே தத்தஞ் செய்தார்.

3 **பூரணமான காணிக்கை.** இது கிறிஸ்துவைப் பொருத் தது. பாவமற்ற பரிசுத்தராய்த் தம்மையே, தமது சித்தத்தையே ஒப்புக் கொடுத்தார்

3. **போன்றதுமான பரிகாரம்.** தேவனைப் பொருத்தது. அவ ரது சித்தத்தைக் கற்பனையை மீறி அவரை வருத்தப்படுத்திவிட்டோம். நாம் மீறின தேவனுடைய நியமத்திற்குத் தக்கதான கிறிஸ்துவின் மர ணம் தேவ நீதியை அனுசரித்தது. 'பாவஞ்செய்த ஆத்துமா சாகும்.' நாம் கிறிஸ்துவுக்குள் அவரோடே மரிக்கிறோம். ஆ! கிறிஸ்துவின் மரணம் எப்படிப்பட்டது? எவ்வளவு ஆச்சரியமமானது! இதை என் றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகமாக ஆண்டவர் தாமே பரி. நற்கருணையை நியமித்திருக்கிறார். பரி. நற்கருணை கிறிஸ்துவின் பாடு மரணமே. அப்பம் பிட்கப்படுகிறது. ரசம் வார்க்கப்படுகிறது. திருச் சரீரம் ரத்தம் வேறாகப் பரிமாறப்படுகிறது. இதனால் கிறிஸ்துவின் பாடுகளைக் கொண்டாடு கிறோம். கிறிஸ்துவையே நினைவுகூறுகிறோம். என்னை நினைவு கூறும் படி இதைச் செய்யுங்கள். கிறிஸ்துவை, அவருடைய ஜீவியத்தை,

அவருடைய பிறப்பு பிரசன்னம் உபவாசம் பாடு மரணம் உயிர்த்தெழுதல் பரமேறுதல் பரிசுத்த ஆவியனுப்புதல், முதலியவைகளை யெல்லாம் பரி. நற்கருணையில் நினைவு கூறுகிறோம். ஆகவே பரி. நற்கருணை தான் எல்லா விஷயங்களுக்கும் ஏற்ற ஒரே ஆராதனை. கிறிஸ்துவானவர் சொன்ன வசனங்களையே சொல்லிப் பிரதிஷ்டை செய்யப்படுகிறது. எல்லாக் காலத்திலும் எல்லாச் சபைகளிலும் வழக்கமே; கிறிஸ்துவானவர் சொன்ன வார்த்தைகளைச் சொல்லும்படியாக மட்டுமல்ல, அவர் செய்தவைகளையும் செய்யப்படும்படியான குறிப்பை நாம் பார்க்கிறோம். அப்பத்தைக் குருவானவர் கையில் எடுக்கிறார், அதைப் பிட்கிறார், எல்லாவற்றின் மேலும் கையை வைக்கிறார். அப்பால் பாத்திரத்தையும் எடுக்கிறார், பாத்திரங்களின் மேலும் கைகளை வைக்கிறார். கிறிஸ்துவானவருடைய வார்த்தை; அவருடைய செய்கைகளுமே. இதை உணர்த்திக் காட்டத்தக்கதாய், குருவானவர் சில ஆலயங்களில் விசேஷ உடைதரித்தவராய் விசேஷ ஆராதனை நடத்துகிறார். மெய்யாகவே கிறிஸ்துவின் விசேஷ பிரசன்னத்தை இச்சமயத்தில் பக்தர்கள் உணர்ந்து அனுபவிக்கிறார்கள். இவ்வித பிரசன்னத்தை மற்றவர்கள் யாவரும், விசேஷமாய் வியாதி முதலியவற்றால் ஆராதனைக்கு வரக் கூடாதவர்களும் சிந்தித்து உணருமாறு அறிவிக்க, மணி அடிக்கப்படுகிற வழக்கம் சில இடங்களில் உண்டு. இவ்வேளையில் மணியோசை ஒருவித பரவசத்தை உண்டாக்கக் கூடியது.

உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் — பரிசுத்த ஆவியானவர் தாமே அப்பத்திலும் திராட்ச ரசத்திலும் வந்து தங்கி ஆசீர்வதிக்கும்படியான ஒரு விண்ணப்பம் பொதுவாய் கீழ்ச் சபைகளின் ஆராதனை முறைமைகளிலிருந்தது. அதற்கிசைய 1549ளுத்து ஜெப புஸ்தகத்தில் பரிசுத்த ஆவிக்காக மன்றாட்டு உண்டு. சீர்திருத்தக்காரர் அந்த மன்றாட்டை நீக்கிவிட்டாலும், அதைக் குறிக்கும்படியாக இவ்வார்த்தைகள் இருந்து வருகிறது.

என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள். கிறிஸ்துவின் பரம ராஜ்யத்தை விரும்புவோர் பலர். அவரது சிலுவையையோ விரும்புவோர் சிலர். இதை நன்றாய் அறிந்து, நாம் எப்பொழுதும் தம் மரண பாடுகளை நினைவு கூர்ந்து, அவற்றின் வழியாக மாத்திரம் பரம ராஜ்யத்தில் பிரவேசிக்கக் கூடுமென்று உணர்ந்துகொள்ளும்படி இந்தப் பரிசுத்த சக்கிரமெந்தை ஏற்படுத்தினார். எதை நினைவு கூர? அவரது உபதேசத்தையும் அல்ல, அவருடைய அற்புதங்களையும் அல்ல, சிலுவையில் அறையப்பட்ட அவரையே நினைவு கூருகிறோம். எப்படி நினைவுகூருகிறோம்? அவர் செய்தபடியே செய்து—பிட்டல், ஆசீர்வதித்தல், அருந்துதல், பருகுதல். இவைகள் எல்லாருக்கும் பொதுவானவை. பரி. நற்கருணையைப்பற்றி பல உபதேசங்களும் அபிப்பிராயங்களும் உண்டு.

அவருடைய நியமம் ஒன்று, திருச் சபை செய்வது ஒன்று, விசுவாசி களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் ஒன்றே ஒன்றாகும்.

இது வெகு விசேஷமான சமயம். பக்திக்கடுத்த விஷயமாய்ச் செலவிடப்படவேண்டும். அமைதலாய்த் தியானிப்பது நன்று. இச் சமயத்தில் 'லோகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்', (இரண்டு தடவை) 'லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச் செய்யும்,' என்னும் மன்றாட்டு சில இடங்களில் பாடப் படுகிறது. இது ஏற்றது. பலர் பரி. நற்கருணை பெறுவதற்கு அதிக நேரமாவதால், ஏதாவது தியான புஸ்தகத்தையோ பாட்டையோ வாசித்துச் சிந்திப்பது நல்லது. சில இடங்களில் பாட்டு பாடுவார்கள். அது பக்திக்கு அனுகூலமாயிருக்கப் பார்க்கவேண்டும். பூக்கள் சூரியனை நோக்கி நிற்குமாப்போல், பக்தன் கிறிஸ்துவை நோக்கி அமர்ந்திருப்பது விசேஷம்.

ஆராதனை நடத்துகிறவர் முதலாவது அப்பமும் திராட்ச ரசமும் உட்கொள்ள வேண்டும். அவர் முழங்கால்படியிட்டோ, நின்றோ அதை உட்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட வில்லை. அவரது வசதியைப் பொறுத்தது. திரு மேசை சற்று உயரமானதானால் முழங்காலில் நின்று உட்கொள்வது கஷ்டமே. குருவானவர் பிரதிஷ்டை செய்கிறவரானதால், அன்று முன்னால் பரி. நற்கருணை பெற்றிருந்தாலும் திரும்பவும் பெற வேண்டும். பலி செலுத்துகிறவன் பலியில் பங்கு பெற வேண்டும் என்பதற்கும், மேலும் குருவானவர் கிறிஸ்துவானவரின் பிரதிநிதியாய் நிற்கிறார் என்பதற்கும் ஏற்க, அவர் முதலாவது பரி. நற்கருணை பெறுவது சரியே. பின்பு ஆராதனையில் பங்கெடுத்த பணிவிடைக்காரருக்குப் பரிமாறப்படும். பொதுவாய் அவர்கள் முழங்காலில் நின்று வாங்குகிறார்கள். ரோம சபையில் பாப்புவானவர் மட்டும் தமது விசேஷ பதவியினிமித்தம் ஆசனத்தி லமர்ந்து பரி. நற்கருணை பெற்றுக் கொள்வது வழக்கம். சுயாதீன சபைகளில் பக்தர்கள் உட்கார்ந்து கொண்டு பரி. நற்கருணை வாங்கிக்கொள்வது வழக்கம்.

அப்பால் ஜனங்கள் எல்லாரும் ஒழுங்காயும் பணிவாயும் முழங்கால் படியிட்டிருக்க, அவரவர் கையில் திருப் பதார்த்தங்கள் கொடுக்கப்பட அவர்கள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் கை நீட்டிப் பெற்றுக் கொள்வது அவர்களது விசுவாசக் கிரியையைக் காண்பிக்கிறது. 'அப்பம் பிரதிஷ்டை யாக்கப்பட்டதினால் சுபாவ மாறுதல் அடைந்து விட்டது. ஆகையால் சபையார் அதைத் தொடக்கூடாது' என்று ரோமானித்தர் சபையாரது வாயிலே வைக்கிறதைக் கண்டிக்குமாறு, கையில் கொடுக்க வேண்டுமென்று நம் ஜெப புஸ்தகத்தில் திட்டமாய்க் குறித் திருக்கிறது. சபையார் ஒழுங்காயும் பணிவாயும் முழங்கால்படியிட்டிருக் கிறது சாக்கிரமெந்தைப் பற்றிய நல்லெண்ணத்தினிமித்தமும், பரி

மாறும் குருமாருக்கு இடைஞ்சல், கஷ்டம் இராமலிருக்கவும். இதற்கு அனுகூலமாக திருமேசை பக்கமாய்ப் படிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

அப்பத்தைக் கையில் கொடுக்கிறது போல பாத்திரமும் பல இடங்களில் கையில் தான் கொடுக்கப்படுகிறது; ஆனால் அவ்வாறு குருவானவர் கையிலிருந்து வாங்கி, மறுபடியும் குருவானவர் கையில் கொடுக்கையில் ரசம் சிந்திவிடாதபடியும் வசதியை உத்தேசித்தும் பாத்திரத்தை வாயிலே கொடுக்கிற வழக்கம் நமது சபையில் சாதாரணமே. இது தற்காலத்தில் அவசிய மென்று காணப்பட்ட போதிலும், அது சபைப் பிரமாணத்துக்கு ஒவ்வாதென்று கவனிக்கவும். பிரதிஷ்டை செய்யப்பட்ட ரசத்தை ரோமானித்தர் சபையாருக்குக் கொடுத்துக் கொள்ளுகிறதில்லை. இது இடையில் உண்டான வழக்கம். பல புராதன சபைகளில் இவ்வாறு இல்லை. பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இரசத்தை ஆலயத்திற்கு வெளியே வியாதியஸ்தருக்குக் கொண்டு போகிறது கஷ்டமென்றும், இரசத்தை சபையாருக்குப் பரிமாறும்போது சிந்தப்படுமோ என்கிற பயம் உண்டென்றும், இன்னும் பரிமாறும்போது குருமார் அநுபவிக்கும் சரீர களைப்பு அதிகமென்றும் சில போலிக் காரணங்களை முன்னிட்டு இரசத்தை நிறுத்தி விட்டார்கள். அதற்கு ஏற்க, பிரதிஷ்டையில் சுபாவ தன்மை மாறுதல் உண்டாயிற்றென்று உபதேசித்து, அப்பத்தில் கிறிஸ்துவின் திருச் சரீரமும் இரத்தமும் இரண்டும் அடங்கியிருக்கின்றன என்பதாகச் சமாதானம் கூறிக் கொள்ளுகிறார்கள். இது ஆண்டவரின் நியமத்திற்கும், ஆதித் திருச் சபை வழக்கத்திற்கும், சத்திய உபதேசத்திற்கும் விபரீதமானது. நமது சபையிலிருந்து பிரிந்து போன பலர் தனித்தனி பாத்திரத்தை உபயோகிக்கிறார்கள். இதுவும் திருச் சபை வழக்கத்திற்கு விரோதம்.

பரிமாறும் வசனங்கள்: அப்பத்தையும் இரசத்தையும் கொடுக்கும் போது எப்பொழுதும் சில வார்த்தைகள் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இவ்வார்த்தைகள் காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டதுண்டு.

(1) மூன்றாம் நூற்றாண்டில் சில சபைகளில் 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம்' என்று குருவானவர் சொல்ல, வாங்குகிறவன் 'ஆமென்' என்று சொல்லுவான். அவ்வாறே பாத்திரத்தைக் கொடுக்கும்பொழுது, பாத்திரததுக்குப் பொருத்தமாகக் கூறப்படும்.

(2) மகா கிரகரி காலத்தில் மேற்படி வார்த்தைகளோடு 'உன் ஆத்துமாவைக் காக்கக்கடவது' என்பது சேர்க்கபபட்டது. 1549-ம் வருஷம் வரை அவ்வாறு வழங்கி வந்தது. ஸ்கொத்லாந்து ஜெப முறையில் அவ்வாறு நடந்துவருகிறது.

(3) 1552-ம் வருஷத்தில் நமது ஜெப புஸ்தகத்திலுள்ள வசனங்களில் இரண்டாம் பாகம் மட்டும் சொல்லும்படியாகக் குறிக்கப்பட்டது.

(4) 1559-ம் வருஷம் தற்சமயம் உள்ளவாறுனது.

குருவானவர் முழு வசனங்களையும் ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டும்; ஆனால், நேரத்தையும், வசதியையும் உத்தேசித்துக் குருவான வர் அவ்வசனங்களில் ஓர் பாகத்தை மட்டும் சொல்லலாம். ஆனாலும், சபை நோக்கத்துக்கு ஏற்ப இரண்டு பாகங்களையும் எல்லாரும் ஒரு தடவையாவது கேட்கும்படி அவற்றைச் சொல்ல அவர் கவனமாயிருத் தல் வேண்டும். வசனங்களில் முதற் பாகம் சாக்கிரமெந்தின் விசேஷ தன்மையையும் பலனையும் குறிப்பிடுகிறது. பிந்தின பாகம் சாக்கிர மெந்தை வாங்குகிறவர்களைப் பொறுத்தது; விசுவாசத்தோடும் நன்றி யறிதலோடும் உட்கொள்ளவேண்டும். சாக்கிரமெந்தின் விசேஷம் நமது ஜெபத்தினுலாவது, விசுவாசத்தினுலாவது உண்டாகாமல் கிறிஸ்துவின் கட்டளையினுலும், நியமத்தினுலுமே. ஆனால், நாம் அதை விசு வாசத்தோடு பெற்றுக்கொள்ளுகிறோம். நமது அவிசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், கிருபையையும் அவமாக்கமாட்டாது.

சிலர் பரி. நற்கருணை வாங்காமலிருக்க, பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்பமாவது, இரசமாவது செலவாய்ப்போனால் முந்தின ஜெபத்தின் பிரதிஷ்டை வார்த்தைகளை மட்டும் வாசித்து ஆசீர்வதிக்கவேண்டும்.

எல்லாரும் பரி. நற்கருணை வாங்கின பின்பு பிரதிஷ்டை செய்யப் பட்ட அப்பத்திலும் திராட்ச ரசத்திலும் மீதியானதைக் திரு மோசையின் மேல் வணக்கமாய் வைத்து சுத்த வெண் வஸ்திரத்தினுலே மூட வேண்டும்.

VI ஆராதனை முறைமை — ஸ்தோத்திர பாகம்

பின்பு கர்த்தருடைய ஜெபத்தைக் குருவானவர் ஆரம்பிக்க சபை யாரும் சேர்ந்து சொல்லவேண்டும். ஸ்தோத்திர பாகத்தில் வருவதால் துதியோடு சொல்லப்படுகிறது. திருப் பந்தி சேர்ந்தபின் நாம் முதலா வதாகச் சொல்லுகிறது 'கர்த்தருடைய ஜெபமே'. இந்தப் பாகத்துக்கு இது ஏற்ற ஆரம்பம். 1549-ம் வருஷத்து ஜெப முறையில் பிரதிஷ்டை ஜெபத்திற்குப் பின்னுலும், பரிமாறுதலுக்கு முன்னுலு மிருந்தது. அவ் வாறு பல சபையின் ஆராதனை முறைமையில் கவனிக்கிறோம். 1928-ம் வருஷத்து ஜெப புஸ்தகத்திலும் பரிமாறுதலுக்கு முன்னல் கர்த்தருடைய ஜெபத்தை அமைத்திருக்கிறது. 'குருவானவர் சொல்ல ஜனங்கள் ஒவ் வொரு விண்ணப்பத்தையும் தொடர்ந்து சொல்லவேண்டும்' என்பதில் குருவானவர் ஒவ்வொரு விண்ணப்பமாகச் சொல்ல சபையார் பின்னுல் சொல்லும்படி குறித்திருக்கிறதைக் கவனிக்கவும்.

சரீர ஆத்தும அர்ச்சனை ஜெபம்

1549-ம் வருஷத்து ஜெப முறையில் பிரதிஷ்டை ஜெபத்தோடு உபயோகிக்கப்பட்டது. 1928-ம் வருஷத்து ஜெப முறையிலும் அவ்

வாறே, பிரதிஷ்டை ஜெபத்தின் முடிவில் 'ஆகையால் பரம பிதாவாகிய கர்த்தாவே...........' என்று தொடர்பாக வழங்கப்படுகிறது. நாம் செலுத்துகிற துதிதோத்திர பலி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; மேலும் அதோடு சரீர ஆத்துமாவாகிய நம்மையும் முழுவதுமாய் (எவ்வள வேனும் ஒதுக்கி வைத்துக் கொள்ளாமல்) பலியாக ஒப்புக்கொடுக்கிறோம் நாம் சகல பாவங்களுமறச் சுத்திகரிக்கப்பட்ட பின் நம்மையே தேவனுக்கு, அவரது உபயோகத்துக்கு, புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறது விசேஷமானது. இந்த ஜெபத்தின் பொருளடக்கம்;—

(1) துதிதோத்திர பலியை ஏற்றுக்கொள்ளவும்,

(2) கிறிஸ்துவின் பாடுகளின் சகல புண்ணியங்களையும் நாம் பெற்றுக்கொள்ளவும் ஜெபித்து,

(3) சரீர ஆத்துமாவாகிய நம்மை முழுவதும் தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்து,

(4) அபாத்திரராயிருந்தும் நாம் செலுத்தியிருக்கிற பணிவிடையை ஏற்றுக்கொள்ளப் பிரார்த்தித்து,

(5) துதி செலுத்துகிறோம்.

துதி தோத்திர பலி. இந்த ஆராதனைக்கு ஓர் பெயர்; ஆராதனை முழுவதையும் குறிக்கிறது. தேவனுடைய பெரிதான இரக்கங்களுக்கு ஏற்ற துதிதோத்திரம்.

புண்ணியத்தினாலும், மரணத்தினாலும் — மரண புண்ணியத்தைக் குறிக்கிறதாக அல்ல, கிறிஸ்துவின் திரு அவதார ஜீவியத்தைக் குறிக்கிறது. திரு அவதார ஜீவிய முழுவதும் தற்பிரிதிஷ்டையான ஜீவியமே.

மற்றெல்லா நன்மைகளையும்: சிலவை மூன்றும் புத்திமதியில் குறிக்கப்பட்டிருக்கிறது. (1) பாவ மன்னிப்போடு, (2) ஞானாகாரம். ஆத்துமா பெலனடைந்து தேற்றப்படுகிறது. (3) கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க நாம் அவருக்குள் வாசமாயிருக்கிறோம். (4) கிறிஸ்து நம்மோடு ஒன்றாயிருக்க நாம் அவரோடு ஒன்றாயிருக்கிறோம். (5) நமது பாவமுள்ள சரீரம் சுத்தமாகி நமது ஆத்துமா கழுவப்படுகிறது. (6) நம்மேல் தேவன் தயைகூர்ந்து கிருபாகடாட்சம் வைத்திருக்கிறார் என்னும் நிச்சயம். (7) கிறிஸ்து வானவரின் ஞான சரீரமாகிய சபையில் நாம் அவயவங்களாய் அனுபவிக்கும் அந்நியோந்நியம். (8) நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரர் என்னும் அனுபவமும்.

சரீரமும் ஆத்துமாவுமாகிய .... பலியாக ஒப்புக்கொடுக்கிறோம்: ரோமர் 12: 1.

புத்தியும்—பழைய ஏற்பாட்டுப் பலி புத்தியற்ற மிருகங்களே: நாமோ நமது சித்தத்தின்படி, சித்தத்தையே ஒப்புக் கொடுக்கிறோம்.

பரிசுத்தமும்—பலிக்கான மிருகம் சுத்தமுள்ளதாயிருக்க வேண்டும், ஆனால் ஆத்மீகப் பரிசுத்தம் மிருகங்களுக்குரியதல்ல.

ஜீவனும்—பலிக்கான மிருகம் கொல்லப்பட்டது: நம்மை ஜீவனுளெ படைக்கிறோம்.

நம்மையே இந்த ஆராதனையில் தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கிறோம். மீண்டும் பிரதிஷ்டை செய்கிறோம். ஆகவே இந்த ஜெபம் சரீர ஆத்தும அர்ச்சனை ஜெபம் என்று அழைக்கப்படுகிறது. நமது சரீரம் சுத்தமாகி ஆத்துமா கழுவப்பட்டு, சரீரமும் ஆத்துமாவும் நித்திய ஜீவனுக்கென்று சாக்கிரமெந்தினால் காக்கப்பட, சரீர ஆத்துமாவாகிய நம்மை முழுவதும் ஒப்புக்கொடுக்கிறோம்,

அபாத்திரராயிருந்தும் .....கடமையின்படி நாம் பாத்திரரல்ல, என்றாலும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்தோத்திர ஜெபம்

1552-ம் வருஷம் அமைக்கப்பட்டது. முந்தின ஜெபத்துக்குப் பதிலாக உபயோகிக்கக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டையும் சேர்த்து உபயோகிக்கிறது ஏற்றது, பலர் இரண்டையும் உபயோகிக்கிறார்கள் 1928-ம் வருஷத்து ஜெப முறைப்படி முந்தின ஜெபம் பிரதிஷ்டை ஜெபத்தோடு உபயோகிக்க இதற்கு இந்த இடம் ஏற்றது. இந்த ஜெபம் பரி. நற்கருணையால் உண்டான பரிசுத்த ஐக்கியத்தைப் பாராட்டுகிறது. இது இரண்டு பாகமுள்ளது:—

A. துதி — (a) ஞானகாரத்தினால் போஷித்ததற்காகவும்,

(b) (1) தேவனுடைய கிருபாகடாட்சம், (2) சபையில் அவயவயங்களாய் இணைக்கப்பட்டிருக்கிறதை (3) நித்திய இராஜ்யத்திற்கு சுதந்தரர், இவைகளை நிச்சயப்படுத்தினதற்காகவும்.

B. ஜெபம்—பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருந்து நற்கிரியைகளை நிறைவேற்ற கிருபைக்காக.

பரிசுத்த இரகசியம் — பரி. நற்கருணைக்குரிய ஓர் பெயர்.

ஏற்றவிதமாய் — ‘உத்தம மனஸ்தாபத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும்’, இன்னும், கர்த்தர் கட்டளையிட்டபடியும் திருச் சபை ஏற்பாட்டின்படியும் என்று குறிக்கலாம்.

ஞான சரீரமாகிய சபையில் ...... இணைக்கப்பட்டிருக்கிறோம். 1 கொரி. 10: 17. ‘அந்த ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிற நாம் யாவரும் அநேகராயிருந்தும் ஒரே சரீரமாயிருக்கிறோம்’. பரிசுத்த ஞானஸ்நானத்தினால் இந்த ஐக்கியத்தில் நாம் சேர்க்கப்படுகிறோம்; பரி. நற்கருணையில் அதைப் வெகுவாய்ப் பாராட்டி வருகிறோம். இந்தப் பரிசுத்த ஐக்கியத்திற்குப் பரி. நற்கருணையே ஏற்றது. நாம் செய்யும்படி நியமித்திருக்கிற நற் கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

தூதர் கீதம்

பிரதிஷ்டை ஜெபத்திற்கு முந்தின ஜெபத்திற்கு முன்னும் தூதர் கீதம், அதற்குப் பிந்தின ஜெபத்திற்குப் பின்னும் தூதர் கீதம். இதன் முதற் பாகம் தேவதூதரால் கிறிஸ்துவின் பிறப்பில் பாடப் பட்டது. இந்தக் கீதம் நாலாம் நூற்றூண்டிலிருந்தே சபையில் வழங் கப்பட்டு வந்திருக்கிறது. இது ஆரம்பத்தில் காலை கீதமாக உபயோகிக்கப் பட்டது. அமெரிக்கா சபை ஜெப புஸ்தகத்தில் மாலை ஆராதனையில் சங்கீதங்கள் வாசிக்கப்பட்டபின் 'பிதாவுக்கும் குமாரனுக்கும்............' என்னும் துதியின் கீதத்திற்குப் பதிலாக இது வழங்கலாம். இதன் நடைப் போக்கை கவனிக்கின் கீழச் சபையில், கிரேக்க பாஷையில் முதலில் எழுதப்பட்டதாக அறிகிறோம். அலெக்சந்தரியாபட்டணத்துப் பிரதி யில் 'பூமியிலே (அவருக்குப்) பிரிய மனுஷருக்குள் சமாதானம்' என்றி ருக்கிறது.

சீர்திருத்தகாலம் வரை, 1549-ம் வருஷத்து ஜெப முறையிலும், பரி. நற்கருணை ஆராதனையின் ஆரம்பத்தில் அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்திற்கு முன்னால் இது வழங்கி வந்தது. நமது துதிதோத்திர பாகம் ஏற்றவாறு இருக்கும்படி 1552-ம் வருஷம் இந்த இடத்திற்கு ஆசீர் வாத்திற்கு முன் கொண்டுவரப்பட்டது. இச்சமயத்தில் இவ்வித துதி யின் கீதம் பாடுகிறது, பரி. நற்கருணை முதலாவது நியமிக்கப்பட்ட பின் 'ஸ்தோத்திரப்பாட்டு' (பரி. மாற். 14 : 26) பாடினதற்குச் சரி. அப் பொழுது சங்கீதம் 113–118 பாடினார்கள்.

இது 'தேவனே உம்மைத் துதிக்கிறோம்' என்னும் கீதத்தைப் போல ஜெபமும், கீதமும், விசுவாச அறிக்கையுமானது. திரித்துவத் தின் மூவரையும் நோக்கினதாக அறியலாம். இரண்டாம் பாகம் கிறிஸ்து வைப் பொறுத்தது. 'உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே' என்று மூன்று தடவை சொல்லப்படுகிறது விசேஷமே. (1549 ஜெப புஸ்தகத்தில் இரண்டு தடவை மாத்திர மென்று கவனிக்கவும்). அவரது தெய்வதன்மையையும், தேவ ஆட்டுக் குட்டியாய் அவர் செலுத்தின பிராயசித்த பலியையும், மரித்த அவர் உயிர்த்தெழுந்து மகத்துவமுள்ளவராய்ப் பிதாவின் வலது பாரிசத்தில் ஜெய வேந்தராய் வீற்றிருப்பதையும் பாராட்டுகிறோம்.

சில ஆலயங்களில் இது பாடப்படும்போது சபையார் எழுந்தும், சொல்லப்படும்போது முழங்காலிலும், நிற்கிறார்கள். திட்டமான ரூபிரிக் இல்லை. மற்ற ஆராதனைகளில் சபையார் எழுந்து நின்று துதி செலுத்துவது வழக்கமே.

உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம். தேவ னுடைய மகிமை கிறிஸ்துவின் திரு அவதாரத்தில் விளங்கினது. 'அவரது மகிமையைக் கண்டோம்' பரி. யோவான் 1: 14.

உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே—பரி. யோவான் 1: 29. நிகழ்காலம் கவனிக்கத்தக்கது.

ஆசீர்வாதம். அத்தியக்ஷர் ஆராதனையில் பங்கெடுத்தால் அவர் சொல்லவேண்டியது. இரண்டு பாகமுள்ளது, (1) தேவ சமாதானம், பிலி. 4: 7. (2) ஆசீர்வாதம்.

இருதயம் அன்புக்கு உறைவிடம்; சிந்தை அறிவுக்கு உறைவிடம்.

VII கடைசி ஜெபங்களும், ரூபிரிக் சட்டங்களும்

ஆறு சுருக்க ஜெபங்களைக் காண்கிறோம். அவைகளில் இரண்டொரு ஜெபங்களை பரி. நற்கருணை பரிமாறுமலிருக்கும் நாட்களில் காணிக்கை வாசகத்திற்குப் பின்பு, அதாவது ஆராதனை முடிவில் வாசிக்கவேண்டும். பரி. நற்கருணை பரிமாறுமல் ஆராதனையின் முதற் பாகத்தை உபயோக்கிறது மிகவும் சாதாரணமான தென்று நமது ஜெபபுஸ்தகத்தில் அறிகிறோம். ஆனல் தமிழ்ச் சபையில் அந்த வழக்கம் பரவ வில்லை. பெரும்பாலர் மாதத்திற்கு ஒரு முறை மாத்திரம் திருப்பந்தியில் சேருவது வழக்கமான தாலும், மற்ற மூன்று ஞாயிறுகளில் பரி. நற்கருணைக்காரர் இல்லாத தாலும் இவ்விதமாய் முதற் பாகம் மாத்திரம் வாசித்து முடிக்க நேரிட்டது. பரி. நற்கருணை பரிமாறப்படாவிட்டால் காணிக்கை வாசகத்தோடு ஆராதனை முடிகிறதாக அர்த்தங்கொள்ளலாம். ஆனல் 'போராடும் திருச் சபைக்கான' ஜெபத்தோடு வழக்கமாய் அவ்வாராதனை முடிகிறதினல், சேர்க்கப்படும் காணிக்கை அங்கீகரிக்கப்படும்படியான ஜெபமும், இன்னும் மற்றவர்களுக்காக ஜெபிப்பதும் காணிக்கையோடே சேர்ந்ததே என்று அறியலாம். போராடும் திருச் சபைக்கான ஜெபம் 1549ம் வருஷத்து ஜெப புஸ்தகத்தில் பிரதிஷ்டை ஜெபத்திற்கு முன்னல் இருந்ததால் பரி. நற்கருணை ஆராதனையின் முதற் பாகம் காணிக்கை வாசகத்தோடு முடிவாகிற எண்ணம் இருந்தது. மேலும், குருவானவர் இஷ்டப்படின், காலை, மாலை ஜெப ஒழுங்கில் வருகிற சுருக்க ஜெபங்களுக்குப் பின்னும், வித்தானியாவிலும், பரி. நற்கருணை ஆராதனை கடைசியிலும் வாசிக்கலாம். பரி. நற்கருணை ஆராதனையில் வாசிக்கிற சுருக்க ஜெபங்கள் பொதுவாய் ஒற்றை இலக்கமாய் இருக்க வேண்டு மென்பது அக்காலத்தெண்ணம். கர்த்தருடைய ஜெபத்தில் ஏழு விண்ணப்பங்கள் இருக்கிறதினல், எப்படியும் ஏழுக்கு மேல் போகக்கூடாது என்றும் நினைத்தார்கள். ஆக அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தை நீக்கி ஆறு ஜெபங்கள் நியமிக்கப்பட்டுள்ளது. அயர்லாந்து சபை ஜெப புஸ்தகத்தில் கூட இரண்டு ஜெபங்கள் (1) மரித்துப்போன பக்தர்களை நினைவு கூறுதலாகவும், (2) குருமாருக்காகவும் உண்டு. 3ம் 5ம், 6ம் சுருக்க ஜெபங்கள் 1549ம் வருஷம் எழுதப்பட்டுள்ளன.

சுருக்க ஜெபம் (1) இது பிரயாணஞ் செய்கிறவர்களுக்காக எடுக்கக் கூடியது. சாவுக்கினமான — அழிவுக் கேதுவான, நிலையற்ற. சாவுக்கினமான இந்த ஜீவ காலத்தில் நித்திய (நிலையான) இரட்சிப்புக்காக ஜெபிக்கிறோம்.

(2) திடப்படுத்தல் ஆராதனையிலும் வருகிறது. முதல் தடவையாகப் பரி. நற்கருணை பெறுகிறவர்களுக்காக உபயோகிக்கலாம். இருதயத்தையும், சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி ஆண்டு நடத்த.

(3) நாம் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றுப் போகாதபடி — பிரசங்கத்திற்குப் பின் உபயோக்கலாம்.

(4) நாம் செய்வதில் தேவனுடைய முன் கிருபாகடாட்சமும், இடைவிடாத சகாயமும் தேவை. குருப்பட்ட ஆராதனையில் உபயோகிக்கப்படுகிறது, குருவானவர் பரி. நற்கருணை ஆராதனையை முடித்து அங்கி கழற்றும்போது தனக்குள்ளே சொல்லிக் கொள்ளத்தக்கது. 'தேவனுடைய கிருபை நமக்கு முந்திக்கொண்டு நம்மில் நல்ல சித்தத்தை உண்டாக்குகிறதுமல்லாமல் நல்ல சித்தம் உண்டான பின்பும் அந்தக் கிருபை நம்மோடுகூட கிரியை செய்யவேண்டும்' (வே.நசி.ந: பிர: X). முன் செல்லும் கிருபை, பின்தொடரும் கிருபை என இரு வகைப்படும். (திரு. பின். 17-ம் ஞாயிறு சுருக்க ஜெபம்)

(5) நமது ஜெபம் ஆராதனை குறைவுள்ளது. வேண்டிக்கொள்ளுகையில் அறியாமை — எவைகளைக் கேட்கவேண்டுமென்று தெரியாமல் விட்டு விடுகிறதும், அவசியமில்லாத சிலவற்றைக் கேட்கிறதும்.

(6) நமது ஜெபங்களுக்கும், வேண்டுதல்களுக்கும் இரக்கமாய்ச் செவிகொடுத்தலுக்காக: குமாரனின் நாமத்தினாலே வேண்டிக்கொள்ளுகிறவர்களுடைய விண்ணப்பங்கள் தேவ சித்தத்துக்கு ஏற்றவை.

முடிவு ரூபிரிக் சட்டங்கள்

பரி. நற்கருணையை முழங்காலில் நின்று வாங்கவேண்டும் என்ற விஷயத்தைக் கூறும் ரூபிரிக் ஆரம்பத்தில் மற்ற ரூபிரிக் சட்டங்களைப் போல சிவப்பு மையில் அச்சிடப்படாமல் கருத்த மையில் அச்சிடப்பட்டிருந்ததால் அதைக் கருப்பு ரூபிரிக் என்றும், வளம்பரம் என்றும் பேர் வழங்கப்பெற்றது. அது நீங்கலாக 9 ரூபிரிக் சட்டங்கள் இருக்கின்றன. இவைகள் 1552-ம் வருஷம் எழுதப்பட்டன; 1662-ம் வருஷத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன.

ரூபிரிக் 1. ஞாயிறிலும், மற்றும் திருநாட்களிலும், பரி. நற்கருணை பரிமாறப்பட வேண்டும் என்பது ஒழுங்கு. அப்படியில்லா திருக்குமானால் ஆராதனையின் முதற் பாகம், அதாவது 'போராடுகிற கிறிஸ்து சபை அனைத்திற்காகவும்' சொல்லிய ஜெபம் முடிய வாசித்து, சில சுருக்க ஜெபங்களோடும், ஆசீர்வாதத்தோடும் முடிக்கவும்.

1549-ம் வருஷத்தில் 'புதன், வெள்ளிக்கிழமை பரி. நற்கருணை பரிமாறு திருக்குமானல்' என்றிருந்தது ஞாயிறுக்கு அடுத்த ஸ்தானத்தில் புதன், வெள்ளி சபை கூடுவதற்கு ஏற்ற நாட்களாக எண்ணப்பட்டன. (லித்தானியா, புதன், வெள்ளிக்கிழமைகளிலும் உபயோகிக்க ரூபிரிக், எம்பர் காலத்துப் புதன், வெள்ளி விசேஷ நாட்களே).

1552-ம் வருஷத்தில் 'புதன், வெள்ளி' விடப்பட்டு 'திருநாட்களில் பரி. நற்கருணை பரிமாறு திருக்குமானல்' என்றிருந்தது.

1662-ம் வருஷத்தில் தற்சமயம் உள்ளபடி 'ஞாயிறு, மற்றும் திருநாள்.'

இவைகளைக் கவனிக்கின், ஆரம்பத்தில் புதன், வெள்ளி, ஞாயிறு திருநாட்களில் பரி. நற்கருணை பரிமாறப்படவேண்டுமென்று ஜெபபுஸ்தகத்தை இயற்றினவர்கள் விரும்பியதாக அறியலாம். இன்னும் விசேஷ முகவுரைகள் ஒவ்வொரு நாளும் உபயோகிக்கப்பட வேண்டியதாயிருக்க வார முழுவதிலும் பரி. நற்கருணை சில இடங்களிலாவது ஆசரிக்கப்பட்டதாக அனுமானிக்கிறோம்.

பரி. நற்கருணை பரிமாறுமல் போகிறது (1) குருவானவரைப் பொறுத்ததும், (2) சபையாரைப் பொறுத்ததும். அக்காலத்தில் குருவானவர் சபையார் இல்லாமல் தனியாய் நடத்தி வந்ததைக் கண்டித்து நிறுத்துமாறு குருவானவருடன் போதுமான ஜனங்கள் பரி. நற்கருணை வாங்கவேண்டும்.

நுபிரிக் 2. அப்படி 'போதுமான ஜனங்கள் இல்லை என்று கண்டால் பரிமாறக் கூடாது'. பரி. நற்கருணையின் முதல் பாகம் வாசிக்கப்படவேண்டும். 'போதுமான ஜனங்கள்' என்றால் எத்தனை பேரை குறிக்கும் என்பதற்காக

நுபிரிக் 3. 20 நற்கருணைச்காரர் இருக்கும் சபையிலும் 4 பேராவது, குறைந்தது 3 பேராவது பரி. நற்கருணை பெறவேண்டும். (இதை அனுசரித்து வியாதியஸ்தருக்குப் பரி. நற்கருணை கொடுக்கும் முறைமையில் அவனோடு 3 பேர், குறைந்தது 2 பேராவது பரி. நற்கருணை பெறவேண்டும் என்றிருக்கிறது (பரி. மத்: 18: 20). இல்லாவிட்டால் பரி. நற்கருணை ஆராதனையின் முதற் பாகமே உபயோகிக்கவும்.

நுபிரிக் 4. குருமார், உதவிக் குருமார் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது பரி. நற்கருணை வாங்கவேண்டும் என்றிருக்கிறதில், மற்ற நாட்களிலும் பரி. நற்கருணை உண்டு என்பதைத் குறிக்கிறது. அத்தியக்ஷாலயங்களிலும் (அத்தியக்ஷருக்குச் சொந்தமான, அத்தியக்ஷாதீனம் முழுவதிற்கும் பொதுவான ஆலயம்) குரு சமூகக் கோயில்களிலும் (குருமார் கூட்டமாய் வசித்து வரும் இடங்களிலுள்ள ஆலயங்கள்) வித்தியாசாலைக் கோவில்களிலும் (கல்லூரிகளில் பல குருக்கள் ஆசிரியராய் ஊழியஞ் செய்வது வழக்கம்) பரி. நற்கருணை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மட்டுமல்ல, அதற்கு அதிகமாய் அடிக்கடி, சில இடங்களில் அநுதினமும்

வழங்கப்பட்டது. சபையார் வருஷத்தில் மூன்று தடவையாவது பெற வேண்டுமென்றிருக்க (ரூபிரிக் 8), குருமார் உதவிக் குருமார் ஞாயிறு தோறும் கட்டாயம் பரி. நற்கருணை பெறவேண்டும்.

ரூபிரிக் 5. 1549-ம் வருஷத்தில் 'புளிப்பில்லாததாய் இருக்க வேண்டும்' என்றிருந்தது. (பஸ்காவை அநுசரித்து).

(1) ஆதியில் வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமே பரி. நற்கருணையிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஏனென்றால் ஜனங்கள் காணிக்கையாய்க் கொண்டு வந்து செலுத்தும் அப்பத்திலும், இரசத்திலும் கொஞ்சம் எடுத்து வைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

(2) அப்பால் 11ம் நூற்றாண்டிலிருந்து அந்த வழக்கம் நின்று போய் குருமாரே அப்பங்களையும், இரசத்தையும் ஆயத்தப்படுத்தினார்கள். புளியாத சிறு அப்பங்களைச் சுட்டு வந்தார்கள்.

(3) அதற்கப்பால் அளவில் (வெள்ளிக்காசு) தெனாரிய—பணங்களைப் போல் பில்லைகளாய்ச் சுட்டு வந்தார்கள். (கிறிஸ்துவானவர் முப்பது தெனாரியுக்கு விற்கப்பட்டார்).

(4) வரவர ரோம சபைகளிலும், கிரேக்க சபைகளிலும் தேவ ஆட்டுக்குட்டியின் சாயலாவது, கிறிஸ்துவானவர் சிலுவையில் தொங்கும் சாயலாவது இந்தப் பில்லை அப்பத்தில் அச்சுப் பதிக்கப்பட்டது. இங்கிலாந்திலும் இப்படிப்பட்ட அப்பப் பில்லைகள் வழங்கி வந்தன.

(5) 1549ம் வருஷம் ஜெப புத்தகத்தில் அப்பப் பில்லைகள் வழங்கவேண்டும் என்றும், அதில் யாதொரு சாயல் பதிக்கப்பட்டிருக்கக்கூடாது என்றும் சொல்லப்பட்டது.

(6) 1552ம் வருஷம் ஜெப புஸ்தகத்தில் 'வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாயிருந்தால் போதும்' என்று கட்டளை யிருந்தது.

(7) எலிசபெத் ராஜாத்தியின் காலத்தில், சபை அதிகாரமில்லாமல் ராஜாத்தி வெளியிட்ட கட்டளைகளில் பில்லைத் துண்டுகளே பரி. நற்கருணையில் உபயோகிக்கப்படுவது தகுதியென்றும் பில்லை சற்றுப் பெரிதும் பருமனுமாயிருக்கவேண்டும் என்றும் இருந்தது.

(8) என்றாலும், ஜெப புஸ்தகம் கடைசியாய்த் திருத்தப்பட்ட போது 'வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாய் இருந்தால் போதும்' என்றிருக்கிறது.

குழந்தைகள் ஞானஸ்நான ஆராதனையில் 'பிள்ளை பெலவீனமாயிருக்கிறது என்று சொன்னால், அதன் மேல் ஜலம் வார்க்கிறதே போதும்' என்றிருக்கிறது. ஒழுங்கு முழுக்காட்டுவது, ஆனால் பெலவீனத்தினிமித்தம் புறநடையாக தண்ணீர் வார்த்தால் போதுமானது என்றிருக்கிறது. அப்படியிருக்க தண்ணீர் வார்ப்பதே வழக்கமாகி விட்டது. இந்த ரூபிரிக்கிலும் ஜெப புஸ்தகத்தின் பாஷை, நடை அவ்வாறே தர்க்கத்திற்கும், வீண் பக்திக்கும் இடமில்லாதபடி எவ்வித எழுத்து, சுரூபமில்லாத இரண்டு மூன்று துண்டாக பிட்கக் கூடிய அப்பப்

பில்லைகளை உபயோகிப்பது வழக்கம். ஆனால் வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாயிருந்தால் போதும், எப்படியும் நல்ல கோதுமை அப்பமாயிருக்க வேண்டும்.

திராட்ச ரசம். யூதர்கள் திராட்ச ரசத்தோடு தண்ணீர் சேர்த்துக் கொள்வது வெகு சாதாரணம். ஆண்டவரும் வழக்கப்படி இராப்போஜனத்தை நியமிக்கும்போது அவ்வாறு உபயோகித்தார் என்பது ஒப்புக் கொள்ளக் கூடியது. ஆதித் திருச் சபையிலும் பல பூர்வ ஜெப முறைகளிலும் தண்ணீர் சேர்க்கப்பட்டதாக அறிகிறோம். கிரேக்க சபையில் ஆராதனைக்கு முன்னும் இங்கிலாந்து பூர்வ சபைகளில் திரு மோசையில் வைக்கும் முன்னும் தண்ணீர் கலந்து கொள்வதுண்டு. ஆனால் திரு மோசையில் வைத்து தண்ணீர் கலந்து கொள்ளுகிறதில்லை. கிறிஸ்து வானவருடைய விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டதென்பதைக் குறிக்குமாறு தண்ணீர் சேர்க்கப்படுகிறதென்பது அபிப்பிராயப்படுவார் உண்டு; கிறிஸ்துவில் தெய்வத் தன்மையையும் மனுஷ தன்மையையும் சேர்ந்ததென்பதைக் குறிக்கிறதென்பார் சிலர். எவ்விதமாவது, திராட்ச ரசத்தோடே தண்ணீரைச் சேர்த்துப் பரி. நற்கருணையை நடத்துவது உசிதமென்று எல்லாரும் பேதமின்றிச் சம்மதிப்பார்கள். அப்பம் வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாயிருந்தால் போதுமானது என்பது போல, வழக்கமாய்ச் சாப்பிடுகிற ரசமாயிருந்தால் சரி. புளிப்பில் லா'ததாயிருக்குமாறு திராட்சப் பழத்தை வாங்கி உடனே பிழிகிறது வழக்கம் அல்ல.

ரூபிரிக் 6. ஆரம்பத்தில் ஜனங்கள் காணிக்கையாகக் கொண்டுவந்து செலுத்தின அப்பத்திலும், ரசத்திலும் கொஞ்சம் எடுத்து வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டு வந்த வழக்கத்தினிமித்தம், பிரதிஷ்டை ஆகாத அப்பமும் ரசமும் குருவானவருக் கென்றிருந்தது. இது தற்கால வழக்கத்திற்கு ஏற்ற தல்ல. 7-ம் ரூபிரிக்கில் ஜனங்கள் காணிக்கையாக அப்பமும் ரசமும் கொண்டு வருகிற வழக்கம் நின்று விட்டதாக அறிகிறோம்.

பிரதிஷ்டையானதில் மீதியானது:- ஆதிச் சபையில், ஆராதனைக்கு வரக்கூடாத வியாதியஸ்தர்களுக்கு இது அனுப்பப்பட்டது. உதவிக் குருமார் கொண்டு போய்க் கொடுத்தார்கள். குருவானவர் சுகவீனமாயிருந்ததினிமித்தம் பட்டம் பெறுதவன் ஒருவன் அதைக் கொண்டு போனதாகப் பழைய காலத்து நூல் ஒன்றில் மாத்திரம் வாசிக்கிறோம். மேலும் தனித்த சபைகள் தங்களுக்குள்ள அந்நியோந்நியத்திற்கு அடையாளமாக, தங்கள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதை மறு சபைக்கு அனுப்பி வந்தார்கள். இவ்வாறு அனுப்பப்படும்போது பொதுவாய் அப்பத்தை இரசத்தில் முக்கி உலர்ந்தபின் அப்பமாக அனுப்புவார்கள். சபையில் உபத்திரவத்தினாலேயோ வியாதியினாலேயோ பலர் மரிக்க அவர்களுக்குத் திடீரென பரி. நற்கருணை பரிமாறுகிற கஷ்டம், வசதியின்மை முதலிய காரணத்தினால், பிரதிஷ்டை செய்யப்பட்டதைத்

திரு மேசையில் ஒரு பெட்டியில் பத்திரப்படுத்தி வைக்கும் வழக்கம் பிற் காலத்தில் ஏற்பட்டது. இவ்வழக்கம் பலருக்கு அனுகூலமாயிருந்ததை யிட்டு, இதைத் திரும்பக் கையாட விரும்புவோர் உண்டு. ரோமன் சபை யார் 'வேடிக்கையாய்ப் பார்ப்பதற்கும் எடுத்துக் கொண்டு திரிகிறதற்கும்' சாக்கிரமெந்தை உபயோகித்ததைக் கண்டிக்குமாறு 'கோவிலை விட்டுக் கொண்டு போகாமல் ஆசீர்வாதம் சொல்லிய உடனே குருவானவரும் அச்சமயம் பந்தியிருந்தவர்களில் சிலரும் அதை வணக்கமாய்ப் புசித்துப் பானம் பண்ண வேண்டும்' என்று கண்டிருக்கிறது.

நபிரிக் 7. அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் எவ்வாறு சவதரிக்க. காரியக்காரர்—கமிற்றி மெம்பர்கள்.

நபிரிக் 8. வருஷத்தில் மூன்று தடவை — அதில் ஒன்று ஈஸ்ற் றர் பண்டிகை. மற்றது கிறிஸ்மஸ், பரிசுத்த ஆவியின் பண்டிகையாக வைத்துக்கொள்ளலாம். வருஷப் பிறப்புத் தினத்தை நமது ஜெப புஸ்த கம் பாராட்டிக் கொள்ளவில்லை. ஆதித் திருச் சபையில் அநுதின மும் அப்பம் பிட்டார்கள். அப். 2: 46. 813-ம் வருஷம் கூடின தூர் நகரத்துச் சங்கம் நற்கருணைக்காரர் ஒவ்வொருவரும் வருஷத் திற்கு மூன்று தடவையாவது பரி. நற்கருணை பெற வேண்டுமென்று தீர்மானித்தது. 1215-ம் வருஷம் ரோமாபுரியில் கூடின சங்கம் ஈஸ்ற்றர் பண்டிகையிலாவது பரி. நற்கருணை பெறுவது ஓர் கடமையாகத் தீர்த்தது. சபையின் பிரதிநிதியாகிய குருவானவர் பெற்றால் போது மானதென்னும் ஓர் வித அபிப்பிராயத்தோடு சபையார் வருஷத் திற்கு ஒரு தரம் பெற்றால் சரி யென்று நினைத்தார்கள். நமது அத்திய க்ஷாதீனத்தில், இந்த ரூபிரிக்கை அனுசரித்து, சபை அங்கத்தினரும் ஓட்டுக் கொடுக்க விரும்புவோரும் மெம்பராக அபேட்சிக்கிறவர்களும் வருஷத்தில் மூன்று தடவையாவது பரி. நற்கருணை பெறுகிறவர் களாயிருக்கவேண்டு மென்பது சட்டம். மூன்று தடவையாவது பெற வேண்டு மென்பதில் அடிக்கடி பெறலாம், ஆனால் மூன்று தடவைக்குக் குறையக் கூடாதென்பது நோக்கம்.

சபைக்குரிய வரிப்பணம்: சபைப் பரிபாலனம் சபையை, விசேஷ மாய்ப் பரி. நற்கருணைக்காரரைப் பொறுத்தது. இப்பொறுப்பை உண ராமல் திருப் பந்தியில் சேர்வதெப்படி? இது விஷயத்தில் யூத சபை ஒவ் வொருவரையும் ஏழையாயிருந்தாலும் கட்டாயப்படுத்தினது. கிறிஸ்து சபையில் இந்தக் கடமை மன உற்சாகத்திற்கு விட்டிருக்கிறது. இங்கி லாந்தில் ஏழைகளாயிருந்தாலும் சிறுவராயிருந்தாலும், நபருக்கு இரண் டணுவுற்குக் குறையாமல் ஈஸ்ற்றர் பண்டிகையில் காணிக்கை செலுத்து வது அக்காலத்து வழக்கம் நமது சபைகளும் ஈஸ்ற்றர் பண்டிகைகளில் ஆலயம், பணிவிடை, ஊழியர், பரி. நற்கருணை ஆராதனை இவைகளினி மித்தம் நபர் ஒன்று குறைந்தது இரண்டணு காணிக்கை போட நினைப்பது நல்லது.

நபிரிக் 9. ஆராதனை நடத்துகிறவரும் (குரு) கோவில் காரியக்காரரும்: கோவில் காரியக்காரர் – சமிற்றி மெம்பர் என்று இந்தியாவில் தாற்பரியப்படுத்தலாம். குருவானவரும் மெம்பர்களும் கூடி காரியங்களைக் கவனிக்கவேண்டு மென்பது சபையின் நோக்கம். அத்தியக்ஷருடைய தீர்ப்பே சகலத்திற்கும் முடிவு. எப்படியும் சபையின் வரும்படி பக்தியும் தருமமுமான விஷயங்களில் செலவிடப்படவேண்டும்.

நபிரிக் 10. கறுத்த நபிரிக் அல்லது விளம்பரம்: சில புஸ்தகங்களில் இது ஒரு கோட்டின் கீழ் அச்சிடப்பட்டிருக்கும். இது 1552-ம் வருஷத்தில் புதிதாய் எழுதப்பட்டு, சபைச் சம்மதமின்றி ராஜா ஆஞ்ஞையால் ஜெப புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டது. எலிசபெத்து இராணி காலத்தில், அது ஜெப புஸ்தகத்தில் ஓர் பாகமாக ஒப்புக்கொள்ளப்படாமல் விடப்பட்டது.

1662-ம் வருஷம் திரும்பவும் சில மாறுதலுடன் சேர்க்கப்பட்டது. 'நிச்சயமாய் உள்ளபடி' (real and essential) என்றிருந்த வார்த்தைகள் 'சரீரப் பிரகாரமாய்' (corporal) என்று மாற்றப்பட்டது.

பரி. நற்கருணையை முழங்காலில் நின்று வாங்கும் நோக்கம் இன்னதென்பதை இது குறிக்கிறது. கிறிஸ்துவானவரது இயற்கையான மாம்சமும் இரத்தமும் சரீரப் பிரகாரமாய் எழுந்தருளியிருக்கிறதென்று எண்ணி, அப்பத்தையாவது இரசத்தையாவது ஆராதித்து வணங்கும்படியாய் அல்ல, பாத்திரமான வகையாய் வாங்குகிறவர்கள் அதன் மூலமாய் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் மகா முக்கியமென்று தாழ்மையோடும் நன்றியறிதலோடும் அறிக்கையிடும்படிக்கும் எவ்வித ஒழுங்கீனமும் பரிசுத்த குலைச்சலும் குழப்பமும் நேரிடாதபடிக்கும் முழங்கால்படியிட்டு வாங்குகிறோம்.

கர்த்தருடைய இராப்போஜனத்திலே அப்பமும் திராட்ச ரசமுமாகிய இவற்றில் சுபாவ மாறுதல் உண்டு என்பது (Transubstantiation) தேவ வசனத்தினாலே ரூபிக்கப்படாமல் தெளிவான தேவ வாக்கியங்களுக்கு விரோதமாயும், சாக்கிரமெந்தின் தன்மையை மறுக்கிறதாயும், அநேக வீண் பக்திக்குக் காரணமாயும் இருக்கிறது (வேத. சித். பிர. 28). கிறிஸ்துவானவர் 'இது என் சரீரம்' 'இது என் இரத்தம்' என்று சொல்லிவிட்டதால் அது அப்பமும் இரசமுமல்ல என்பதைக் கண்டிக்கிறது. சில பிரிவினைக்காரர் 'சரீரம்' 'இரத்தம்' உவமானப் போங்கு, உருவகமானதாகக் கருதுகிறார்கள். நமது திருச் சபை உபதேசிப்பது:

'பிரதிஷ்டை பண்ணப்பட்ட அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் வணக்கத்தோடும் விசுவாசத்தோடும் உட்கொள்ளும் விசுவாசிகள் உள்ளபடியே கிறிஸ்துவின் திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ளுகிறார்கள்' என்பதே.

VIII புத்திமதிகள்

நமது ஜெப முறையின் முடிவில் மூன்று புத்திமதிகளைக் காண்கிறோம். இவ்வித புத்திமதிகள் நமது சபை ஆராதனையின் விசேஷம். மத்திய காலத்தில் பரி. நற்கருணை ஆராதனை 'மாஸ்' என்று அழைக்கப்பட்டு அதிகமாய்க் குருமாரைப் பொறுத்ததாயிருந்தது. சீர்திருத்தக்காரர் அது சபையாருக்கும் அவசியமானதாகக் கொண்டார்கள். ஆகவே சபையார் ஏற்ற ஆயத்தத்தோடு வரவேண்டிய புத்திமதிகள், எச்சரிப்புகள் தேவை. அசட்டைக்காரரை ஏவி எழுப்பி, நிர்விசாரிகளையும் சந்தேகிகளையும் உணர்த்தி, பாவ உணர்வுள்ளவர்களை வழி நடத்தவேண்டியது அவசியம். அதற்காக மூன்று புத்திமதிகள் உண்டு. அவைகளில் மூன்றாவது மட்டும் பரி. நற்கருணை ஆராதனையில் வாசிக்கக் கூடியது. ஆனால் அதுவும் பொதுவாய் வாசிக்கப்படுகிறதில்லை. 'சின்ன புத்திமதி' அல்லது 'அழைப்பு' எனப்படும் 'உங்கள் பாவங்களினிமித்தம்...........,' என்பது போதுமானதாகக் கருதப்படுகிறது. முதல் இரண்டு புத்திமதியும் குருவானவர் இஷ்டப்படி பரி. நற்கருணை பரிமாறப் போகும் நாளுக்கு முன்வரும் ஞாயிற்றுக்கிழமையிலாவது விசேஷ நாளிலாவது பரி. நற்கருணையைப்பற்றி அறிவிக்கும்போது பிரசங்கமாக வாசிக்கலாம். சிலர் பிரசங்கத்தோடு சேர்த்து வாசிக்கிறார்கள். முதல் புத்திமதியில் 'அபாத்திரராய்த் துணிந்து பெறுகிறதினால் உண்டாகும் மோசங்களை' வற்புறுத்தியிருக்கிறது. இரண்டாம் புத்திமதி பரி. நற்கருணைப் பந்தியைப்பற்றி சபையார் அசட்டையுள்ளவர்களாயிருந்தால் வாசிக்க வேண்டியது. மூன்றும் புத்திமதி பரி. நற்கருணை வேளையில், ஏற்ற விதமாய்ப் பரி. நற்கருணையைப் பெற்றுக்கொள்ளச் செய்ய வாசிக்கப்படுகிறது.

முதலாம் புத்திமதி (1) பரி. நற்கருணையைப் பற்றிய அறிவிப்பு.

(2) நாம் இவ்வாறு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

(3) பாத்திரராய்ப் பெறுகின்றவர்களுக்கு நன்மையும், அபாத்திரராய்த் துணிந்து பெறுகிறவர்களுக்கு மோசமும்,

(4) ஆயத்தம்: (a) தற்சோதனை, (b) அறிக்கை, (c) மற்றவர்களுக்குச் செய்த நஷ்டங்களுக்குப் பரிகாரம், (d) மற்றவர்களது பாவங்களை மன்னிக்க மனதுள்ளவர்களாகயிருக்கவும்.

(5) பாவி மனந் திரும்பாவிடின், பந்தியில் சேராதிருக்க எச்சரிப்பு (யூதாஸ் காரியோத்தின் விஷயம் எச்சரிப்பாகப் பழைய புஸ்தகங்களில் உண்டு. யூதாஸ் பரி. நற்கருணையில் பங்கு பெற்றுக்கொண்டானோ இல்லையோ என்று புலப்படாது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட துணிக்கை பஸ்கா சம்பந்தமானது. இராப்போஜனம் பண்ணின பின்புதான் பரி. நற்கருணை நியமம்).

(6) மன சாட்சியைச் சமாதானப் படுத்தக் கூடாதவர்கள் ஆலோசனைக்காகவும் ஆறுதலுக்காகவும் குருவானவரிடத்தில் வந்து பாவி விமோசனம் அடையலாம்.

ஆறுதல் செய்யும் திவ்விய நன்மையுள்ளது: ஆறுதல் — பலன டைந்து தேற்றப்படுகிறது. திவ்விய — தேவனோடு ஐக்கியம் உண் டாக்குகிறது.

பாத்திரராய் — 'நாம் மேசையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொருக்கிக்கொள்ள பாத்திரரல்ல' தான் என்றாலும் பயபக்தியான சிந்தையும் தகுந்த ஆயத்தமுமுள்ளவர்களாய்ச் சேரவேண்டும்.

அபாத்திரமாய்: துணிந்து பெறுகிறவன் 1 கொரி. 11: 27. ஆண்ட வரின் சரீரத்தையும் இரத்தத்தையும் பற்றிய விஷயத்தில் குற்றத்திற்கு ஆளாகுகிறான். அவன் கிறிஸ்துவின் மரணத்தைத் தகாதவாறு பிரஸ் தாபிக்கிறான்.

மனோ வாக்கு காயம் — மனது, வார்த்தை, கிரியை, பரிசோதித்து, அறிந்து, துக்கப்பட்டு, அறிக்கையிட்டுத் தீர்மானம் செய்யவேண்டும்.

மற்றவர்களுக்குச் செய்த நஷ்டங்களுக்கும்..............பரிகாரம். பரி. லூக். 19: 8.

தேவனைத் தூஷிக்கிறது, அவரது வசனத்திற்குத் தடை செய் கிறது, அதை நிந்திக்கிறது, எந்தக்கொடிய பாவத்தையும் செய்கிறது. பாவம் படிப்படியானது.

மனச் சமாதானம் விசேஷம். அது உலகம் கொடுக்கக்கூடா தது. அது தேவனால் தேவ வசனத்திற்கேற்ற ஊழியத்தின் மூலமாய் அருளப்படுகிறது. மனச் சமாதானத்தைப் பாவம் கெடுக்கிறது. பாவ மன்னிப்படையச் சமாதானம் உண்டாகிறது. குருவானவரிடத் தில் நம் பாவங்களைத் தெரிவிக்க, அறிக்கையிட, நாம் பாவ விமோசன மாகிய நன்மையையும் ஆத்துமாவுக்குரிய நல் ஆலோசனையையும் அடைகிறோம். இவ்வாறு தனித்துக் குருவானவரிடம் பாவ அறிக்கை செய்வதை நமது சபை சபையாரின் பூரண இஷ்டத் திற்கு விட்டிருக்கிறது. ரோம சபையைப் போல கட்டாயப் படுத்துகிற தில்லை. மேலும் மற்றவர்களைப் போல அவ்வாறு பாவ சங்கீர்த்தனம் செய்ய வேண்டுவதில்லை யென்றும் சொல்லுகிறதில்லை. வியாதியஸ் தரைச் சந்திக்கும் முறைமையில் இவ்வித பாவ சங்கீர்த்தனத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆராதனையிலுள்ள பாவ விமோ சனத்தையே குருவானவர் இவர்களுக்கும் உபயோகிக்கலாம். பாவ மன்னிப்பைக் கூறுதல் கிறிஸ்துவானவர் சபையில் குருமாருக்கு அருளி யிருக்கிற ஓர் விசேஷ அதிகாரம். (குருப் பட்டாபிஷேக வார்த்தைகள்.)

இரண்டாம் புத்திமதி: ஜனங்கள் பரி. நற்கருணை பந்தியில் சேருவதில் அசட்டையாயிருந்தால் வாசிக்க வேண்டியது. இதன் விஷ யங்கள் :—

(1) பரி. நற்கருணையைப் பற்றிய அறிவிப்பு,

(2) தேவனுடைய நாமத்தினுல் அழைப்பு,

(3) ஒரு மனிதன் நல்ல விருந்து செய்ய, முகாந்தரமில்லாமல் வரமாட்டோம் என்பது நன்றிகேடு, அவசாரம், விசனம், நஷ்டம், அநியாயம், கோபத்தையும் மூட்டும்.

(4) லௌகிக அலுவல், பாவத்தின் பயனுன பயம் முகாந்தரமாக மாட்டாது. வீண் சாக்குப் போக்குகளே.

(5) லௌகிக அலுவல்களை முகாந்தரமாகக் கொண்டவர்களுக்கு, பெரிய விருந்தின் உவமை (பரி. லூக். 14: 16–24) நல்ல எச்சரிப்பு.

(6) பாவம் தடையாயிருக்கக் கூடாதென்பதாகக் குருவானவர் (a) தமது உத்தியோகத்தின்படி, (b) தேவனுடைய நாமத்தினுல், (c) கிறிஸ்துவினிமித்தம் வருந்தி அழைத்து, பாவத்திலிருந்து இரட்சிப்படைய பரி. நற்கருணைப் பந்தியில் சேரவேண்டும். நமக்கு இரட்சிப்புண்டாகக் கிறிஸ்து அடைந்த மரணத்தையே நாம் பரி. நற்கருணையில் நினைவு கூறுகிறோம்.

(7) பரி. நற்கருணையை அசட்டை செய்வது தேவ துரோகமும் சகோதர அந்நியோந்நியத்திலிருந்து விலகுதலும்.

(8) சபையாருக்காக ஜெபம்.

தேவனுடைய நாமத்தினுல் — குரு தேவனுடைய ஸ்தானுபதி.

வீண்போக்கு தேவ சமுகத்தில் செல்லாது. பரி. லூக். 14: 18. (1) வயலைக்கொண்டேன், (2) ஏர் மாட்டைச் சோதிக்கவேண்டும், (3) கலியாணம் செய்து கொண்டேன்.

தேவ துரோகம்: அவரது அன்பின் அழைப்பை அங்கிகரிக்காததும் அவருக்குக் கீழ்ப்படியாததும் துரோகம் தண்டனைக்கு ஏதுவானது.

சகோதரரை விட்டுப் பிரிந்து போகுதல்:— பரி. நற்கருணை பரிசுத்தவான்களுக்குள் அந்நியோந்நியத்தை உண்டாக்க, பரி. நற்கருணைப் பந்திக்கு வாராமலிருப்பது அந்நியோந்நியத்தை விட்டு விலகுவதே.

அக்காலத்திற்கு ஏற்க, இந்தப் புத்திமதியில், ஆராதனைக்கு வந்து பரி. நற்கருணை பெற்றுக் கொள்ளாதவர்களேயும் கண்டித்திருந்தது. இது பின்னுல் விடப்பட்டது.

மூன்றம் புத்திமதி: இது பரி. நற்கருணை ஆராதனையில் வாசிக்க வேண்டியது. ஏற்ற விதமாய்ச் சாக்கிரமெந்தைப் பெற்றுக்கொள்ளும்படியாகச் செய்கிற பிரசங்கம். ஒழுங்கான பிரசங்கம் நீசெயா விசுவாசப் பிரமாணத்திற்குப் பின்னுல் வருகிறது. இது இரண்டாவது பிரசங்கமாய் எண்ணப்படாதபடி பொதுவாய் விடப்படுகிறது. அதனுல் இது ஆராதனைக்குப் பின்னுல் எழுதப்பட்டிருக்கிறது. இதில் பரி. நற்கருணையைப்பற்றிய நல்ல போதனை அடங்கியுள்ளது; 1 கொரி. 10-ம் 11-ம் அதிகாரத்தை அனுசரித்துள்ளது.

(1) பரி. நற்கருணை சேருமுன் தற்சோதனை செய்யவேண்டும் 1 கொரி. 11: 28.

(2) மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் நாம் சேர்ந்தால் பிரயோஜனம் பெரிது.

(3) அபாத்திரமாய்ப் பெற்ருல் மோசம் பெரிது.

(4) ஆசையால் தற்சோதனை செய்து, மனஸ்தாபப்பட்டு, விசுவாசத்தோடு, சீர்திருத்தி, எல்லாரிடமும் அன்பாயிருக்கவும். (ஞான உப. விடை).

(5) கிறிஸ்துவின் மரணத்தினுல் உண்டான இரட்சிப்புக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

(6) பரி. நற்கருணை நியமிக்கப்பட்ட நோக்கம், (a) அவரது அன்புக்கு அத்தாட்சியாகவும், (b) அவரது மரணத்தைப்பற்றிய நினைவு கூர்தலாகவும் (ஞான. உப. விடை).

(7) ஸ்தோத்திரம். ஞானப் பிரகாரமாய்க் கிறிஸ்வின் மாமிசத்தைப் புசித்து.........1 கொரி: 10: 16, 17. அபாத்திரமாய் வாங்கினுல் மோசமும் பெரிதாயிருக்கும்—கொரிந்து சபை எச்சரிப்பு 1 கொரி: 11: 30.

IX பரி. நற்கருணை ஆராதனையும் தேவ ஊழியரும்

(1) பரி. நற்கருணை ஆராதனை பக்தர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தின் அனுபவம். நாமும் அதன் விசேஷத்தையும் அருமையையும் அனுபவத்தினுல் தான் கண்டறியக் கூடும். பக்தர்களும் இந்த ஆராதனையில் பங்கெடுக்கிருர்கள். அவர்கள் அனுபவத்தை நாமும் அனுபவிப்பது அவர்களுக்கு எவ்வளவோ சந்தோஷம்.

(2) பரி. நற்கருணையை எக்காலத்திலும் பல சபைகளும் விசேஷித்துப் பாராட்டி வந்திருக்கின்றன. இதையிட்டு பலரும் பல வாறு பாராட்ட அநேக சபைப் பிரிவினைகளும் இதினிமித்தமே. பரி. நற்கருணையைச் சரியாய் அறிந்து ஒழுங்காயும் செம்மையாயும் ஆசரிக்க, சபை ஐக்கியம் எதிர் நோக்கலாம்.

(3) பரி. நற்கருணை ஞாயிற்றுக்கிழமைகளிலும் திரு நாட்களிலும் விசேஷ நாட்களிலும் ஒழுங்காய் ஆசரிக்குமாறு, திருச் சபை சுருக்க ஜெபம், நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம் குறித்திருக்கிறது. திருச் சபையின் ஊழியர் சபையின் நோக்கத்திற்கு இசைந்து அவ்வாறு ஆசரிக்கவேண்டும். ஆனுல் பலருக்கு மாதம் ஒரு பரி. நற்கருணைக்குத் தான் வழியிருக்கிறது. என்ருலும் ஆலயத்தில் அமரிக்கையாய் அமர்ந்து பரி. நற்கருணை ஆராதனையை ஒழுங்காய் வாசித்து முடிப்பது நல்லது. தியானத்திற்கு

வெகு அனுகூலமானது. மேலும் இது ஆவிக்குரிய நற்கருணை. வியாதியஸ்தருக்குக் கொடுக்கும் பரி. நற்கருணை முறைமையில் இந்த ஒழுங்கு இருக்கிறது. இது சாக்கிரமெந்தைப்பற்றிய நல்ல எண்ணத்தை அதிகரிக்கச் செய்யும்.

(4) பரி. நற்கருணையைப் பற்றிய நல்லெண்ணத்தினிமித்தமும் சபையில் நல்லெண்ணத்தை உண்டாக்குமாறும் ஆலயமும் விசேஷமாய்ப் பரிசுத்த ஸ்தலமும் சுத்தமாயும், ஆராதனை, பாட்டுகள் நன்றாயும் எழுப்புதலாயுமிருக்கப் பார்க்கவேண்டும். பொட்டரித்தும் பழையதுமான கந்தைத் துணிகளை ஆலயத்திலிருந்து அகற்றவேண்டும். நம் உடுப்பும் விசேஷமானதாயிருப்பது நல்லது.

(5) பரி. நற்கருணைப் பந்தியில் ஏற்ற ஆயத்தத்தோடு சேரவேண்டும். பரி. நற்கருணை பெற ஆயத்தம் இல்லாவிட்டாலும், அந்த ஆராதனைக்குப் போகும் வழக்கம் பலரால் கையாளப்படுகிறது. பரி. நற்கருணை ஆராதனைக்கு வந்துவிட்டு பக்தி சேராதிருப்பது குறை. பந்தியில் சேராவிட்டாலும், ஆராதனை முழுவதிலும் பங்கு பெறுகிறது நல்லது. பாவ மன்னிப்பு, தேவ ஆசீர்வாதம் இந்த ஆராதனையில் அருளப்படுகிறதே.

(6) பரி. நற்கருணையைப்பற்றி சபைக்கு அதிகமாய்ப் போதித்து உபதேசிக்க வேண்டும். ஆராதனை முறைமையை நன்றாகக் கற்றுக் கொடுத்து ஏற்ற பிரகாரம் ஆராதனையில் பங்கு எடுக்க நினைக்கவும்.

(7) பரி. நற்கருணை ஆராதனை தியானத்திற்கு மிகவும் ஏற்றது. காலை வேளையில் பரி. நற்கருணையை நினைப்பது நன்று. உபவாசத்தோடு ஆசரிப்பது பல பக்தருக்கே வழக்கம்.

(8) இது துதிதோத்திர பலி, தேவனைத் துதிக்க ஏற்றது. குடும்பத்தில் பிறந்த நாள், கலியாணம், விசேஷ நாட்களில் தேவனைத் துதிக்க இந்த ஆராதனையை நோக்கலாம்.

(9) இந்த ஆராதனையில் நமது சரீரம் ஆத்துமா முழுவதும் தேவனுக்குப் புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக் கொடுக்கிறோம். மேலும் நமது காணிக்கைகளையும் தேவ சமுகத்தில் படைத்து, தேவன் தாமே ஏற்றுகொள்ளப் பிரார்த்திக்கிறோம். பரி. நற்கருணையோடு நமது காணிக்கைகளைச் சம்பந்தப்படுத்திச் செய்வது தகுதி.

(10) பரி. நற்கருணை ஆதித் திருச் சபையின் விசேஷ ஆராதனை. காலை மாலை ஆராதனைகள் அதன் சம்பந்தமாயுள்ளன. பரி. நற்கருணை ஆராதனைக்குரிய சுருக்க ஜெபம் காலை மாலை ஆராதனையில் உபயோகிக்கப்படுகிறது. (காலை ஆராதனை பரி. நற்கருணைக்கு முன்னால் வழங்கப்படவேண்டு மென்பது நமது ஜெப புஸ்தகத்தின் ஒழுங்கு.

குருப் பட்டாபிஷேக ஆராதனையில் நற்கருணை ஜெபத்தின் ஒரு பாகமாயிருக்க காலை ஜெபம் முன்னால் நடத்தப்படுகிறது, மேலும் சில நாட்களுக்குரிய சுவிசேஷ வாக்கிய பாகம் அந்த நாளின் காலை ஆராதனையின் இரண்டாம் பாடத்தின் தொடர்ச்சியாயுள்ளது). ஆகவே, பரி. நற்கருணை ஆராதனையைப் பாராட்டி நமது காலை, மாலை ஆராதனைகளை எடுப்போமாக.

(11) பந்தி சேரும்போது ஜனங்கள் ஒழுங்காயும் கிரமமாயும் பக்தி விநயமாயும் வர ஏற்பாடு செய்து, பரிமாறும் குருமாருக்கு எவ்வித இடைஞ்சல், தாமதம் நேராதபடி பார்த்துக் கொள்ளவும்.

(12) சபையில் ஏற்ற பக்தி உண்டாக வேண்டுமானால் முதலில் அது நம்மில் உண்டாக வேண்டும். 'மற்றவர்கள் எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் செய்யுங்கள்.'